# ஸ்ரீ காசி ஸ்ரீமத் பரமஹம்ஸ ஹரிஹரானந்த அவதூத ஸ்வாமிகளின் சரித்திரமும்

அவர்கள் சிஷ்யர் சேங்காலிபுரம்

# ஸ்ரீமத் ராமாநந்த ப்ரும்மேந்திர ஸ்வாமிகளின் சரித்திரமும்



பிரசுரித்தவர்கள் :

ரிடயர்டு புதுக்கோட்டை ஸ்டேட் பிரஸ் ஸூப்ரின்டெண்டு

ஸ்ரீ A. சுந்தரமய்யர்

புதுக்கோட்டை ஸ்ரீ சுப்பராமய்யர் கலாசாலை ஹெட்மாஸ்டர்

ஸ்ரீ S. பாலசுப்பிரமணிய அய்யர்

உரிமை பெற்றது ] * [ விலை 0—8—0

ஸ்ரீ;

ஸ்ரீ ஹரிஹரானந்த திவ்ய சரிதம் கோரக்பூரில் வெளியாகும் கல்யாண் என்ற ஹிந்தி பத்திரிகையில் வந்த வரலாற்றின் மொழிபெயர்ப்பாகும்.

வடமொழியில் இயன்ற சரித்திர சங்கிரகம் சிதம்பரம் அண்ணுமலை சர்வகலாசாலையில் ஸம்ஸ்கிருத ஆசாரியராக இருக்கும் ஸ்ரீ K. A சிவராமகிருஷ்ண சாஸ்திரிகள் செய்தது.

தமிழ் மொழியில் உரைநடையாகவும் செய்யுளாகவும் இவ்வரலாற்றை அமைத்தவர் ஸ்ரீ நா. கனகராஜையர்.

இந்த அன்பர்க்கெல்லாம் தத்தகுரு பிரசாதம் பரிபூரணமாக அமைவதாகுக.


இந்நன்மக்களுக்கு என் நன்றியும் வந்தனமும் உரியதாகும்.

A சுந்தரமையர்.

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 4 | 5 | பையர் | பாபா |
| 15 | 14 | புண்ணியச் | புண்ணியர் |
| 17 | 1 | துருவாம் | துருவாப் |
| 17 | 7 | லித்தக | வித்தக |
| 18 | 11 | தத்த | தத்தா |
| 19 | 5 | பழ | பழன |
| ,, | 7 | மூலகிளர் | முலகினர் |
| ,, | 9 | துருவுமள | துருவுமன |
| ,, | 12 | மூளைப்பாடி | முனைப்பாடி |
| ,, | 13 | சார்த்து | சார்ந்த |
| ,, | 25 | கண்ணலெ | கண்ணனெ |
| 20 | 9 | பகமை | பகைமை |
| ,, | 22 | துயரோ | துயரொ |
| ,, | 23 | உழவராத் | உழவாரத் |
| 21 | 1 | சிவபுரமாம் | சிவபுரமாப் |
| ,, | 3 | வனைய | வளைய |
| ,, | 15 | பெறும் | யெனும் |
| ,, | 17 | யாபிரம் | யாயிரம் |
| ,, | 21 | புரவனூர் | புரவலனூர் |
| ,, | 22 | அனிக்க | அளிக்க |
| 22 | 15 | புரவலன்றள் | புரவலன்றன் |
| ,, | 22 | வருளாளே | வருளானே |
| 23 | 12 | னேரே | னரே |
| 27 | 11 | அகப்பொரு | அகப்பொருள் |
| 28 | 2 | மற்றுநீர் | மற்றுநீ |
| ,, | ,, | நன்கறிவீர் | நன்கறிதி |
| ,, | 10 | கோதியனும் | கோதியலும் |
| ,, | 26 | முலவு | முறவு |
| ,, | 28 | யிருந்த | மிருந்த |
| 37 | 5 | தத்தாசிர | தத்தாசிரம |
| ,, | 13 | ஆசிரமம் | ஆசிரம |
| 38 | 4 | கோலயத் | குகாலயத் |
| 41 | 5 | சிட்ரூக | சிடனுக |
| 43 | 9 | உத்திர | உத்தர |
| 44 | 5 | நாற்புர | நாற்புற |

குறிப்பு:—பிழைகளை முதலில் திருத்திக்கொள்க.



ஸ்ரீ காசி ஸ்ரீமத் பரமஹம்ஸ ஹரிஹரானந்த
அவதூத ஸ்வாமிகள்.

## श्री हरिहरानन्दस्तोत्रम् ॥

## ஸ்ரீ ஹரிஹராநந்தஸ்தோத்ரம்

नीलाचलाभं रमणीयदेहं लसज्जटाजूटविभूषिताङ्गम् ।
दिगम्बरञ्चैव महेशतुल्यं योगीश्वरं त्वां सततं नमामि ॥१॥

நீலாசலாபம் ரமணீயதேஹம்
லஸஜ்ஜடாஜூடவிபூஷிதாங்கம்,
திகம்பரஞ்சைவ மஹேசதுல்யம்
யோகீச்வரம் த்வாம் ஸததம் நமாமி. 1

गङ्गौघमध्ये तु सदा वसन्तं भक्तैश्च संसेवितपादपद्मम् ।
रोगातुराणां च सदा शरण्यं योगीश्वरं त्वां सततं नमामि ॥२॥

கங்கௌகமத்யே து ஸதா வஸந்தம்
பக்தைச்ச ஸம்ஸேவிதபாதபத்மம்,
ரோகாதுராணும் ச ஸதா சரண்யம்
யோகீச்வரம் த்வாம் ஸததம் நமாமி. 2

जपेन योगेन सदाप्रदीप्तं विमुक्तरागं गलिताभिमानम् ।
बालस्वभावं कमनीयरूपं योगीश्वरं त्वां सततं नमामि ॥३॥

ஜபேந யோகேந ஸதாப்ரதீப்தம்
விமுக்தராகம் கலிதாபிமாநம்,
பாலஸ்வபாவம் கமநீயரூபம்
யோகீச்வரம் த்வாம் ஸததம் நமாமி. 3

वाक्सिद्धियुक्तं भवबन्धमुक्तं मुमुक्षुभिश्चैव सदाप्रणम्यम् ।
दारिद्र्यहं दीनजनैकबन्धुं योगीश्वरं त्वां सततं नमामि ॥४॥

வாக்ஸித்தியுக்தம் பவபந்தமுக்தம்
முமுக்ஷுபிச்சைவ ஸதா ப்ரணம்யம்,
தாரித்ர்யஹம் தீனஜனைகபந்தும்
யோகீச்வரம் த்வாம் ஸததம் நமாமி. 4

निर्धूतपापं विगतत्रितापं संसारदुःखानलवारिवाहम् ।
सर्वार्तिनाशं धरणीनिवासं योगीश्वरं त्वां सततं नमामि ॥५॥

நிர்தூதபாபம் விகதத்ரிதாபம்
ஸம்ஸாரது:காநலவாரிவாஹம்,
ஸர்வார்திநாசம் தரணீநிவாஸம்
யோகீச்வரம் த்வாம் ஸததம் நமாமி. 5

वैराग्यवन्तं जितशीतग्रीष्मं क्षुधापिपासादिविकारहीनम् ।
योगेनयुक्तं जगतिप्रसिद्धं योगीश्वरं त्वां सततं नमामि ॥६॥

வைராக்யவந்தம் ஜிதசீதக்ரீஷ்மம்
க்ஷுதாபிபாஸாதிவிகாரஹீநம்,
யோகேந யுக்தம் ஜகதிப்ரஸித்தம்
யோகீச்வரம் த்வாம் ஸததம் நமாமி. 6

वाराणसीस्थं त्रिपुरारिभक्तं शिवेति गङ्गेति सदा जपन्तम् ।
रामस्वरूपं शिवनामलीनं योगीश्वरं त्वां सततं नमामि ॥७॥

வாராணஸீஸ்தம் த்ரிபுராரிபக்தம்
சிவேதி கங்கேதி ஸதா ஜபந்தம்,
ராமஸ்வரூபம் சிவநாமலீநம்
யோகீச்வரம் த்வாம் ஸததம் நமாமி. 7

सन्यासिमुख्यं हतभक्तदुःखं वाराणसीवासिसदाशरण्यम् ।
विश्वैकसारं करुणावतारं योगीश्वरं त्वां सततं नमामि ॥८॥

ஸந்யாஸிமுக்யம் ஹதபக்தது:க்கம்
வாராணஸீவாஸி ஸதாசரண்யம்,
விச்வைகஸாரம் கருணாவதாரம்
யோகீச்வரம் த்வாம் ஸததம் நமாமி. 8

॥ श्री हरिहरानन्दस्तोत्रं संपूर्णम् ॥

ஸ்ரீ ஹரிஹராநந்தஸ்தோத்ரம் ஸம்பூர்ணம்.

ஸ்ரீ:

# பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யவர்ய ஸ்ரீ ஹரிஹரபாபா
## (ஸ்ரீமத் ஹரிஹரானந்த அவதூத சுவாமிகள்)

ஸ்ரீ ஹரிஹர பாபா ஒரு மஹாத்மா. அவர் ஆச்சரியமான ஸித்திகைவந்தவர். அவர் காசி க்ஷேத்திரத்தில் இருந்துகொண்டு தவமியற்றினர். அவர் தவமே இலக்கியத்துக்கு ஒரு பேருபகாரமாகும். பரிசுத்தமான தீர்த்தத்தையுடைய கங்கா தேவியின் மடியிலேயே (எப்படி குழந்தை தன் தாயின் மடியில் வாத்ஸல்யத்துடன் விரும்பியிருக்குமோ அதுபோல்) நின்று அவர் வாழ்நாட்களின் ஒரு பெரும் பகுதியைக் கழித்ததிலிருந்து அவருக்குக் கங்கையினிடம் இருந்த பக்தியையும் அவருடைய தெய்வ பக்தியையும் நாம் ஒருவாறு உணரலாம். காசிக்கு வரும் யாத்ரீகர்கள் எல்லோரும் அவரைத் தர்சிப்பதால் தங்கள் பாபங்களைக் கழித்து புண்யத்தை ஸம்பாதிப்பதாக நம்பி அவரை தர்சித்து செல்வது வழக்கம். விச்வநாதரின் க்ஷேத்ரமான காசியில் அவர் சிவனைக் குறித்து தவம் புரிந்தும் ஸத்யத்தைப் பூசித்தும், ஸௌந்தர்ய ரூபியான பகவானை உபாஸித்தும் அமரானர். அவர் எப்போதும் சாந்தியும் தவமும் உருவெடுத்ததுபோன்று இருந்தார்.

சுமார் நூற்றைம்பது வருஷங்களுக்குமுன் ஹரிஹர பாபா பிஹார் மாகாணத்தில் சப்ரா ஜில்லாவில் உள்ள ஜாபர்பூர் கிராமத்தில் ஒரு பிராமண குடும்பத்தில் பிறந்தார். குழந்தைப் பருவத்தில் அவருடைய பெயர் ஸேனுபதி திவாரீ. அப்பருவத்திலேயே அவரிடம் மிகுந்த வைராக்யம் விளங்கியது. ஸம்ஸ்கிருதம் கொஞ்சம் படித்ததுமே காசி

யாத்திரை சென்று அங்கு ஸ்ரீவீதராகாநந்தர் என்ற மஹானுடன் தங்கினர். பிறவியிலிருந்தே பக்தராயிருந்த அவருக்கு மனம் ஹரிக்கும் ஹரனுக்கும் ஆலயம் என்ற ஒரு சீரிய எண்ணம் உதித்து. காசியில் அவருக்கு "ஹரிஹர பையர்" என்ற பெயர் வழக்கிலிருந்தது. அவர் தன் வாழ் நாட்களைக் கடுந்தவத்திலேயே கழித்தார். குளிர்காலத்தில் கொடிய குளிர், கோடையின் கடும் வெயில், மழைகாலத்தின் விடாத மழை, காற்றுக்காலத்தின் பலத்த புயல் ஒன்றுக்கும் அஞ்சாது சலியாது தவமியற்றினர். எப்போதும் கங்கையின் பிரவாஹத்தில் ஒரு ஓடத்தில் அமர்ந்து வறுத்த மணலை உண்டு ராமனை உபாஸிப்பது என்று ஒரு விரதம் எடுத்துக்கொண்டார். துளஸியின் ராமமயமான வாக்கும் ராமநாம த்வனியும் காசியில் மட்டுமேயன்றி பாரத நாடு முழுவதுமே ஒரு பக்தியாகிய கங்காப் பிரவாஹத்தைப் பெருகச் செய்தது. வெகு தூரத்திலுள்ள தீர்த்தயாத்ரிகளும் ஆங்காங்கு புண்ணிய தீர்த்தங்களிலும் முக்கியமான க்ஷேத்ரங்களிலும் அவருடைய செய்தியைப் பரப்பி பகவான் ராமனுடைய வெற்றிப் புகழைப் பரப்பிவந்தனர்.

ஹரிஹரபாபா சில காலம்வரை காசி ஹிந்து விச்வ வித்யாலயத்தின் அருகில் தங்கியிருந்தார். ஒரு சமயம் விச்வ வித்யாலய மாணவன் ஒருவன் செருப்புக் காலுடன் பவித்ரமான அவருடைய ஓடத்தில் ஏறி வந்தான். பாபாவின் சீடர்கள் அவனை அவ்வாறு செய்யாது தடுத்தனர். ஆனல் அவனுடைய கர்வம் வளர்ந்தது. மற்றும் சில மாணவர்களை யழைத்து வந்து அவன் ஒரு குழப்பத்தைச் செய்தான். பொறுமையே உருவெடுத்த ஹரிஹர பாபா அந்த இடத்தை விட்டு விலகி அஸ்ஸீ காட்டுக்குச் சென்றார். அச்சமயம் மஹாபாகவதரான மாளவியா காசியில் இல்லை. பிறகு

காசிக்கு வந்ததும் நடந்ததைக் கேட்டு வருந்தி பாபா இருந்த அஸ்ஸீ காட்வரையில் நடந்தே சென்று, ஒரு காலால் நின்று மன்னிக்கும்படி ப்ரார்த்தித்து மறுபடி முன் இடத்துக்கு வரும்படி வேண்டினர். பாபா மறுபடி செல்லவில்லை. ஆனல் பாபாவின் சாந்தமான முகத்திலிருந்து தன்னை மன்னித்ததாகவே தெளிந்து மன அமைதி பெற்ருர்.

எல்லாக் காலங்களிலுமே ஹரிஹரபாபா மலஜலம் கழிக்க கங்கையின் அக்கரைக்குச் செல்வார். ஓடத்தை எதிர்பாராது சில சமயம் நீந்தியே அக்கரை சென்று பிறகு ஓடத்தில் திரும்பி வருவார். ஓடத்திலிருந்துகொண்டே மஹா சாந்தியுடன் ராமநாமத்தின் ஆனந்தத்தை அனுபவித்து வந்தார். ஓடத்திலேயே சிஷ்யர்கள் ராமாயணம், பாகவதம் முதலான கிரந்தங்களைப் பாராயணம் செய்வார்கள். நடு நடுவே நாமஸங்கீர்த்தனமும் நடக்கும். "காசிக்கும் கங்கைக்கும் பதிலாக இனிய சுவர்க்கம் கிட்டினும் அதை வேண்டேன்" என்று ஹரிஹர பாபா அடிக்கடி சொல்லுவார். நாட்கள் செல்லச் செல்ல மிகவும் கொடிய தவத்தைச் செய்தார். கங்கை நதியிலேயே ஆடையின்றி நின்று ஸூர்யனில் திருஷ்டியை வைத்து வர்ஷக்கணக்காகத் தவம் இயற்றினர். அவர் திகம்பராாகவே இருந்தார். ராமன் சிவன் இருவரிடத்திலும் அழியாத ஒப்பற்ற பக்தி அவருக்கு இருந்தது.

விக்ரமஸம். 2007 ஆஷாட சுக்ல பஞ்சமியில் கங்கா மாதாவின் மடியிலேயே ஹரிஹர பாபா மஹாநிர்வாணத்தை ஏற்றுக்கொண்டார்.

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

---

இந்த மஹானுடைய பரம சிஷ்யர்தான் சேங்காலிபுரம் சுவாமிகள் என்று அழைக்கப்படும்
**ஸ்ரீ ராமாநந்த ப்ரும்மேந்திர சுவாமிகள்.**


॥ श्रीः ॥

# ॥ उपोद्घातः ॥

श्रियःपतिः सर्वेश्वरः संसारार्णवमग्नानां तारणाय शास्त्राणि उपदिदेश। पुनरपि विषयासक्तान् नरान् निवर्तयितुम् आचार्यरूपेण अवततार। ते च आचार्याः ख्यातिलाभपूजाविमुखाः स्वोपदेशेन स्वानुष्ठानेन च जनान् समीचीनमार्गे स्थापयन्ति। एवमुपकुर्वतामाचार्याणां केनापि न कोऽपि प्रत्युपकारः कर्तुं शक्यते। एवं च सति आत्मनः कृतज्ञतानिवेदनार्थं कृतघ्नतापरिहरणार्थं च विवेकिना पुरुषेण आचार्यगुणानुसन्धानं कीर्तनं च कर्तव्यम् इति शास्त्रमर्यादा।

भगवान् दत्तात्रेयः, यो ब्रह्मविष्णुरुद्रात्मको भवति, धर्मोपदेशायैव भूमाववततार। तस्य च अनुयायिनो बहवो वर्तन्ते। तेषु गुणपरिवृढाः श्रीमत्परमहंस रामानन्दब्रह्मेन्द्र-स्वामिपादाः इदानीं अस्मद्भाग्यविशेषेण अस्मन्मध्ये विराजन्ते। एते च स्वामिपादाः दत्तसमाजनाम्ना तत्र तत्र कतिचन पाठशालाः स्थापयित्वा सर्वेषां, विशिष्य बालानां, संस्कृतभाषाबोधनाय, भगवत्स्तोत्राध्ययनाय च व्यवस्थां कृत्वा, बाल्य एव आस्तिक्यं सनातनधर्मे श्रद्धां च वर्धयन्ति। तच्चरित्रवर्णने प्रवृत्तोऽयं ग्रन्थः सरसया सुमधुरया वाण्या विजयते। भक्तिपूर्वकं सर्वैः स्वोज्जीवनाय पठितव्य एष इति प्रार्थये।

श्रीनिवासराघवः



சேங்காலிபுரம்
ஸ்ரீமத் ராமானந்த ப்ரும்மேந்திர ஸ்வாமிகள்.

॥ श्रीः ॥

॥ श्रीरामोऽवतु ॥

# श्रीमत्परमहंसरामानन्दब्रह्मेन्द्रस्वामिनां चरितसंग्रहः ॥

वारणमास्ये जगतां कारणमीडेऽन्तरायहरचरणम् ।
शरणं भक्तजनानामर्चितचरणं सुरैस्तमोहरणम् ॥ 1 ॥

परहंसश्रीरामानन्दब्रह्मेन्द्रचरितसङ्कलने ।
वाचामधीश्वरि त्वां याचे वैदग्ध्यमात्मनो दीनः ॥ 2 ॥

छित्रा रामानन्दब्रह्मेन्द्राणां न्ययूयुजन् भक्ताः ।
मामत्र विभ्यदेषां प्रत्यादेशात् करोमि सन्दर्भम् ॥ 3 ॥

अस्ति मद्रपुरीप्रान्ते श्रोत्रियैः शास्त्रपारगैः ।
कर्मठैर्द्विजधौरेयैर्दान्तैरध्युषितः पुरा ॥ 4 ॥

कोट्टलाप्पाक्कनामाग्रहारः पुण्यनदीवृतः ।
पिनाकिनी यत्प्रदेशं पुनाति सरितां वरा ॥ 5 ॥

गरुडाख्यां बिभ्रती च नदीश्रेष्ठा यदन्तिके ।
मज्जतामघविध्वंसिपयःपूरा प्रढौकते ॥ 6 ॥

अलंचकार यतिराट् तं प्रदेशं स्वजन्मना ।
अन्ववाये यतेरस्य रत्नखेटपदाङ्चितः ॥ 7 ॥

श्रीनिवासमखी जज्ञे पूर्वं व्यासयशाः कविः ।
यन्महिम्ना ह्यमावास्या पूर्णिमा समजायत ॥ 8 ॥

विदुषः पतिविजिगीषून् श्लोकेनैकेन विह्वलांश्चक्रे ।
गृहिणी यस्य कदाचित् गोमयलेपं प्रकुर्वती कल्ये ॥ 9 ॥

यदन्वयो यतिप्रष्ठैर्मण्डितो बहुभिः पुरा ।
बभावतितरां सोऽयं रामानन्देन्द्रजन्मना ॥ 10 ॥

अवाप्तबालसंस्कारः पित्रोरानन्दवर्धनः ।
उपनीतः प्राप्तकाले विद्याग्रहणकौतुकी ॥ 11 ॥

कालोचितां हूणभाषां ग्राहितोऽभूत्कलालये ।
अतृप्तश्च तया वाण्या जगृहे द्राविडीं गिरम् ॥ 12 ॥

आन्ध्रीमपि च गैर्वाण्या बाल्य एव सुधीरयम् ।
एवं समाप्तविद्योऽसौ बाष्पप्रवहणाध्वनि ॥ 13 ॥

वृत्तिं लब्ध्वा नयन्कालं चेन्नपत्तनमागमत् ।
विख्यातयशसां यत्र विदुषां सङ्गमो भवेत् ॥ 14 ॥

भट्टश्रीबिरुदाञ्चितनारायणशास्त्रिणा गरिष्ठेन ।
वाग्मिवरेणेत्यासौ परिचयमध्यैष्ट तन्मुखात् ग्रन्थान् ॥ 15 ॥

भगवद्गीतां रघुवरचरितं वल्मीकजन्मसङ्कलितम् ।
उपनिषदः कतिचिच्च प्राग्भवसंस्कारचोदितो यतिराट् ॥ 16 ॥

इत्थं प्रयाति काले मद्रपुरे वासमीयुषो यमिनः ।
पचेलिमैः सुकृतभरैः भवभङ्गायाजनिष्ट सत्सङ्गः ॥ 17 ॥

चेन्दमङ्गलभूमियैः चकाशे विजितात्मभिः ।
स्वयंप्रकाशब्रह्मेन्द्रावधूतैः पितृमातुलैः ॥ 18 ॥

तदपाङ्गसङ्गविधुताघभरो मुमुदे च जन्मसफलं बबुधे ।
चकमे च तत्परिसरे वसतिं यतिपुङ्गवोऽयमवशः सततम् ॥ 19 ॥

तत आरभ्य मुहुर्मुहुरवधूतदिदृक्षया तदावासम् ।
यतिरेष चेन्दमङ्गलमवाप तेषां प्रसन्नदृष्टिञ्च ॥ 20 ॥

लब्धेऽवसरे गीताविचारमकरोत्तदन्तिके भक्त्या ।
कालक्रमेण चैच्छद्गृहस्थधर्माद्विरन्तुमचिरेण ॥ 21 ॥

उचितावसरे गुरुवरनिकटे संन्यासमात्मनः प्राप्तुम् ।
इच्छामाविश्चक्रे बहुकृत्वो मोक्तुकाम आत्मानम् ॥ 22 ॥

गुरवस्तु कालकाङ्क्षिण एनत्सद्यो न मेनिरे युक्तम् ।
अशिषन्ननुवर्तयितुं द्वितीयमेवाश्रमं सुखोदर्कम् ॥ 23 ॥

अन्ववर्तत गार्हस्थ्यं कालकाङ्क्षी कथञ्चन ।
कालः फलति सर्वत्र न यत्नः सुमहानपि ॥ 24 ॥

तुङ्गापगातरङ्गैः शिशिरितशृङ्गाद्रिमहितभूभागे ।
शङ्करभगवत्पादाचार्यवरिष्ठैः प्रतिष्ठिते यत्नात् ॥ 25 ॥

शङ्करमठे तदानीमधिपतिभावं समास्थिता यमिनः ।
श्रीचन्द्रशेखरोत्तरभारत्यभिधाः समागमन् क्षेत्रम् ॥ 26 ॥

शंङ्करभगवत्पादा अवतेरुर्यत्पवित्रमवनितले ।
पूर्णाच्छवारिपूर्णा शमयति तापं च यत्र पापेन ॥ 27 ॥

कालटिनाम्ना विश्रुतमतिहृद्यं सुखकरं च सवसताम् ।
श्रुत्वैतच्चेन्दमङ्गलगुरोरनुज्ञामवाप्य तान् द्रष्टुम् ॥ 28 ॥

यतिरायात् क्षेत्रवरं द्वारं मुक्तेरिव स्थितं मह्याम् ।
स्नात्वा पूर्णावारिणि दृष्ट्वा कृष्णं च तत्र सन्निहितम् ॥ 29 ॥

गुरुवरचरणौ नत्वा भक्त्या परया प्रणम्रशीर्षेण ।
करुणापाङ्गं प्रथमं दत्तमनुं द्वादशार्णमथ लब्ध्वा ॥ 30 ॥

आचार्येभ्यस्तेभ्यो मेने चात्मानमात्तपुरुषार्थम् ।
अनुपदमुज्झितवृत्तिः क्षेत्राटनकौतुकाद्ययौ देशान् ॥ 31 ॥

हरिद्वारं हृषीकेशमयोध्याप्रभृतीनथ ।
वाराणसीं मुक्तिभूमिमवाप्योवास तां पुरीम् ॥ 32 ॥

तत्र च कतिचिद्दिवसान् अशनायाबाधितो जितधनायः ।
सन्यासं संप्रेप्सुर्मुक्ताहारश्चचार बहुदुःखी ॥ 33 ॥

पुनरपि शृङ्गगिरीन्द्रं प्राप्याचार्यानयाचतानम्रः ।
ते चैनमन्वगृह्णन्निच्छासंपूर्तिमन्यतः शीघ्रम् ॥ 34 ॥

स्वान्वयपरिशुद्धिबलादवधूतसरस्वतीसमालोकात् ।
शृङ्गाद्रिगुरुवराणामनुग्रहाच्चोत्तमोत्तमे क्षेत्रे ॥ 35 ॥

वाराणस्यां तुर्याश्रममापासौ सुदुर्लभं लोके ।
सुकृतविशेषैः पक्वैर्जनुष्वतीतेषु संचितैः सम्यक् ॥ 36 ॥

हरिवरपरमानन्दा अवधूतसरस्वतीपदोत्तंसाः ।
परहंसाः स्वावासं वाराणस्यां तदोररीचक्रुः ॥ 37 ॥

तन्निकटे मासान् षट् शिष्यत्वं प्रेप्सुरवसदवनम्रः ।
ते च प्रसन्नमनसा क्रमसंन्यासाश्रमं प्रदायास्मै ॥ 38 ॥

श्रीमत्परमहंसश्रीरामानन्दपदान्विताम् ।
ब्रह्मेन्द्रपदसंश्लिष्टसरस्वत्यभिधामदुः ॥ 39 ॥

अध्यात्मशास्त्रविदुषां प्रवचनसरणिं ततोऽथ बहुकृत्वः ।
यतिराट् समये समये प्रीतः शुश्राव बहुषु देशेषु ॥ 40 ॥

श्रीमत्पशुपतिनाथक्षेत्रं कैलासशैलगर्वहरम् ।
नेपालभूललाम द्रष्टुमनाः प्राप तं देशम् ॥ 41 ॥

शिवरात्र्यां पुण्याहे पशुपतिमीशं दृशोः सुधासेकम् ।
दर्शं दर्शं ध्यायन् मासांस्त्रीनश्रमेण समनैषीत् ॥ 42 ॥

ततो देशानटन् शृङ्गगिरिराजं पुनर्ययौ ।
नेरूरग्रामं ततश्चेन्दमङ्गलं तदनन्तरम् ॥ 43 ॥

एवं गच्छन् बहून् देशान् रामसेतु जगाम सः ।
पदातिरेव च ततो न्यवर्तत यतीश्वरः ॥ 44 ॥

अटन् यदृच्छया प्रापत् शेङ्गालिपुरनामकम् ।
अग्रहारवरं विप्रैर्धार्मिकैर्धनिकैर्वृतम् ॥ 45 ॥

वसंस्तत्र कियन्तंचित्कालं ग्रामवरे यतिः ।
महिमान तस्य बुध्वा देशस्य मुदितो भृशम् ॥ 46 ॥

उचितोऽयमग्रहारो दत्तश्रीपादुकाप्रतिष्ठायाः ।
तन्मनुयन्त्रस्थापनकर्मवरस्येति निश्चिक्ये ॥ 47 ॥

इच्छानुगुणं कर्मप्रवर्तने दक्षतां दधानोऽसौ ।
प्रत्यष्ठापयदत्र ग्रामे श्रीदत्तपादुके यन्त्रम् ॥ 48 ॥

पञ्चाशदुत्तरनवशताधिके वत्सरे सहस्रतमे ।
हौणे दत्तजयन्तीमहोत्सवं यस्समारेभे ॥ 49 ॥

गानकलानिष्णाताः परश्शतं मोदयन्ति यत्र जनान् ।
दक्षाश्च दाक्षिणात्या विद्वद्वर्या वचोमधुस्यन्दैः ॥ 50 ॥

लोकक्षेमाकाङ्क्षी यतीश्वरोऽयं महोत्सवं कुरुते ।
प्रत्यब्दं ग्रामवरे शेङ्गालिपुरेऽत्र दत्तगुरोः ॥ 51 ॥

नवसालपुरावासिजनतास्तिक्यनन्दिना ।
यतिराजेन दत्तश्रीसमाजो निर्ममे शुभः ॥ 52 ॥

मान्यश्रीसुब्बरामार्यकलालयवराङ्गणे ।
यत्र बालाः माणवका दत्तस्तोत्राण्यधीयते ॥ 53 ॥

नाम्नां सहस्रं विष्णोश्च शङ्कराचार्यनिर्मितान् ।
स्तवग्रन्थोत्तमान्नित्यं सप्ततेरधिका मुदा ॥ 54 ॥

म्लाना यतिवरोत्साहपयःसेकप्रवर्धिता ।
वाणी समुज्जृम्भतेऽहो गीर्वाणहृदयङ्गमा ॥ 55 ॥

दत्तश्रीपादुकयोस्तन्मनुयन्त्रस्य चालयो नूत्नः ।
निरमायि यतिवरेण दत्तकुटीराभिधः प्रतिष्ठायै ॥ 56 ॥

कुम्भाभिषेको यस्याभूद्वत्सरे मन्मथाह्वये ।
कार्तिके सितपञ्चम्यां यतीन्द्रस्य मुदावहः ॥ 57 ॥

जीयाद्दत्तकुटीरोऽयं भायाद्दत्तमहोत्सवः ।
जयतादग्रहारश्च शेङ्गालिपुरनामकः ॥ 58 ॥

लोकहितैषी रामानन्दब्रह्मेन्द्रसंयमीन्द्रोऽसौ ।
जयतुतरां भुवि सुचिरं भक्तैः शुद्धैश्च निजशिष्यैः ॥ 59 ॥

नमो वाचामधीश्वर्यै नटराज नमोऽस्तुते ।
नम आचार्यवर्येभ्यः परस्मै ब्रह्मणे नमः ॥ 60 ॥

---

# முகவுரை

தமிழகத்தில் அருள்நெறி வளர்த்த சான்றோர் பலர். சைவமும், வைணவமும் தழைத்த தமிழகத்தே சங்கரரும், இராமாநுஜரும் அவதரித்த தமிழகத்தே தத்தாத்திரேய குரு பரம்பரையில் வந்த துறவறமும் இன்று தழைத்து வருகின்றது. இம்மரபில் வந்த சன்யாசிகளுள் சேந்தமங்கலத்தில் சித்தியடைந்திருக்கும் சுவாமிகளை அறியாதவர் தமிழகத்தில் இல்லை என்றே கூறலாம். இந்த மகான் அநுக்கிரகத்தினலே காசி வரை சென்று அங்கு தவமே உருவமாக விளங்கிய ஹரிஹரானந்த அவதூதியாரிடம் துறவு பெற்ற இராமாநந்தப் பிரம்மேந்திர ஸ்வாமிகளைத் தமிழ் மக்கள் நன்கு அறியவேண்டும்.

தமக்கென வாழாப் பிறர்க்குரியாளரான இப புண்ணியச் சோழ நாட்டில் உள்ள செல்வம் மிக்க கிராமங்களிற் சிறந்த சேங்காலிபுரத்தில் தத்தகுரு ஆலயமும், மடமும் அமைத்து அத்தர்மம் சாசுவதமாக நடக்கத்தக்க திருப்பணி செய்துவருகின்றார். இவரது வரலாறு தமிழ் மக்கள் அறிந்து பயன் பெறத்தக்கதே என்ற நினைப்பால் காவிய நடையிலும், உரை நடையிலும் இந்நூலுள் இரு பிரிவாக வகுத்து உரைக்கப்படுகிறது. வடமொழியிலும் இவ்வரலாறு சுருக்கமாய் இயன்றுளது. வடமொழி பயின்றவர்க்கே அது பயன்படும். தமிழ் மட்டும் அறிந்தவர் இந்தச் செய்யுளையும், உரை நடையையும் பயின்று இம்மகானது பெருமையை உணரவேண்டும் என்பதே இவற்றை ஆக்கிய ஆசிரியன் கருத்து என்று கூறுவது மிகையாகாது. அன்பும் அருளும் உலகில் வாழத் துறவியர் மரபு வாழ்வதாக.

ஆசிரியன்

ஸ்ரீ:

ஸ்ரீராமஜயம்

# ஸ்ரீராமானந்த சரித்திராமிருதம்

## காப்பு

### விநாயகர் துதி

**தரவுக்கொச்சகக்கலிப்பா**

பிரணவமே தனதுருவாம் பிறங்குமொரு பிள்ளையிரு
சரணமலர் தலையேற்றி சரண்புகுந்து வாழ்த்துதும் யாம்
அரணமென முடிபொருளை யணுகுமிரா மானந்தர்
கிரணவொளி விரித்தகதை கிளத்துபணி பூண்பதற்கே. 1

### சிவபரஞ்சுடர்

அரியாயு மயனுயும் அரியவற்றுள் அரிதாயும்
பெரிதாயும் சிறிதாயும் பிறங்குமருட் பிஞ்ஞகனை
விரிதாம விதழிபுனை வித்தகனை வேண்டுதுமால்
உரிதாய பெருஞ்சரிதை யுலகுணர வுரைப்பதற்கே. 2

### முருகன்

இருமகளிர் தமைமணந்தும் ஈடெடுப்பில் துறவரசர்
கருதுகழல் மலருடைய காங்கேயனருள் நினைவாம்
வருதுயர மொழிவுபெற மனமடங்கு பெருந்துறவு
தருதுரிய சாந்தநிலை தழுவுநரைப் புகழ்வதற்கே. 3

### திருமால்

பிறப்பறியான் பலபிறவி பிறந்தருளும் பெருமையுளான்
அறப்பெரியான் மேருவினை அகிலமொடு விழுங்கவல்லான்
சிறப்புரியான் தூண்பிறந்து சிறுதொழும்பைப் புரக்குமவன்
மறப்பரியான் ஆதலினல் வணங்கியருள் வேண்டுதுமே. 4

### நான்முகன்

நான்மறையின் முடிபொருளை ஞாலமுளார் உணரும்வணம்
நான்முகமே பூண்டிரண்டு நான்மை பெறு கால்களொடு
மான்முகமே யுரைத்தவணம் வகைவகையே படைத்தருளும்
மான்மியமே யுடையானை மனமார வணங்குதுமே. 5

### தக்கிணாமூர்த்தி

பக்குவா பக்குவராம் பலவகைய தொழும்பரையும்
ஒக்கவே திருக்கண்ணால் உவப்புறவே நோக்கியவர்
சக்குவே மனமொருங்கச் சாந்தநிலை பெறவருளும்
தக்கிணா மூர்த்தியிரு தாண்மலரும் தலைசேர்ப்பாம். 6

### தத்தத்திரேயர்

சத்தமுத லியபுலனும் சக்குமுத லியபொறியும்
சுத்தசிவ வத்துவிதம் தோய்ந்திருக்க மனத்துறையும்
சித்தர்மா பருமணியாம் திரிமூர்த்தி யுருவமைந்த
தத்தமுனி தாண்மலரைத் தலையார வணங்குதுமே. 7

### இராமபிரான்

அஞ்சனைசே யெனப்பிறந்த அறிவனுளம் கொளுமாறு
செஞ்செவிய தத்துவத்தைச் செப்பியருள் பெருமானை
மஞ்சனைய திருமேனிவள்ள லென வுலகுணரும்
அஞ்சனமே யனையானை அகநிறுத்தி வணங்குதுமே. 8

### கண்ணபிரான்

பார்த்தனிரு செவியேறப் பரமகுய்ய மருள்புரிந்த
தீர்த்தனிரு சேவடியைச் சென்னிமிசை நிறுத்துவமே
ஆர்த்தமறை முடியறிய அருந்துறவி னெறிபுகுந்த
தீர்த்தாது திருச்சரிதை செகதலத்தில் வழங்குதற்கே. 9

### முனிமரபு

அத்திரிமா முனிமகனாப் அவதரித்த சத்தமுனி
பத்திரமே புட்பமின்றிப் பரவுமன மலர்நிலைக்கும்
சித்திரமா மும்முகத்துத் திருவுருவன் மரபில்வரும்
வத்திரமே யிலாத்துறவின் மரபை யனவரதம் தொழுவாய். 10

## நூல்

அருள்வளமும் சிவமயமும் அரிமயமும் மறைமுடிபின்
பொருள்வளமும் தமிழ்மறையே புனைவளமும் பெருநூலோர்
தெருள்வளமும் கலைவளமும் தேவர்பிரான் திருக்கோயில்
வருவளமும் பொருந்துவது முனைப்பாடி வளநாடே. 11

செந்நெல்வளர் பழமொடு செங்கருப்பு நிறைபுலமும்
கன்னல்தரு முத்தமொடு கமுகின் முத்தம் உதிர்புலமும்
நன்னலமே பொருந்துழவர் நாளுமுலகினர் மகிழ
எந்நலமும் பெறமுயலும் இயைபுடைய வளநாடே. 12

சுத்தசிவ சத்தினையே துருவுமள நிலையினரும்
கத்தமெனும் பிரமாணம் சரணமென நினைகுநரும்
பத்தகணம் பண்டுபுகும் பழமைநெறி தொடர்குநரும்
முத்தர்தொடர் படையமுயல் முனைப்பாடி வளநாடே 13

சத்திசிவ மெனத்தெளிந்து தமைச்சார்த்து சான்றவரும்
சித்திதரும் தெய்வமெனத் திருமாலைத் தேடுநரும்
பத்திநெறி யொருமையினாற் பண்புறவே யொருங்கிருக்கும்
முத்திமண மிகமணக்கும் முனைப்பாடி வளநாடே. 14

நக்கனையே தொழுதாலும் நாரணனை யிகழாரும்
சக்கரனை யடைந்தாலும் சங்கரனை யிகழாரும்
ஒக்கவமை மனமுடனே யுவப்புறவே வாழ்வு பெறும்
பொக்கமிலா முனைப்பாடிப் புண்ணியநற் றிருநாடே. 15

ஆத்திகமே தழைத்தோங்கி ஆரியமும் செழுந்தமிழும்
நாத்திகமே யொழிக்கவமை நற்படையாம் பணிபூண
சோத்திரமே யரியரனும் தூயபரம் பொருட்குரிய
தோத்திரமே கேட்கவமை தூயவர்வாழ் திருநாடே. 16

கண்ணனென்று பரவுநரும் கண்ணுதலே யென்பவரும்
அண்ணலென்று மனமுருகும் அன்பினெறி பற்றினரும்
வண்ணமுரு விலாப்பொருளை மனத்திருத்து பெருமையரும்
திண்ணமுற வீடுபெறும் தெளிவுடைய திருநாடே. 17

தமையுணராப் பருவத்தே சமண்புகுந்து சூலையினால்
இமையவல்லி தனைப்புணரும் இறைவனடித் தொழும்புரிமை
அமையவருந் திருநாவுக் கரசுபிறந் தருள் நெறியைச்
சமையமுடி புணர்ந்துணர்த்தும் தவம்பொலிந்த திருநாடே. 18

வேளாண்மை குலப்பணியா மேதகவாற் கொள்பவரும்
தாளாண்மை துணையாகத் தனங்குவிக்கும் மரபினரும்
வாளாண்மை தோளாண்மை மருவுதிருக் குலத்தினரும்
கோளாண்மை மறையவரும் குலவிவளர் திருநாடே. 19

பகைமையிலா மனப்பண்பும் பயின்றகுல நெறியொழுக்கும்
தகைமை குலாம் சிவநெறியும் தலைமை குலாம் புலத்திருவும்
வகைமை குலாம் கலையுணர்வும் மறைப் பொருள்தேர் நுணுகறிவும்
தொகைமை குலாம் பொருள்வளமும் தொக்கபெருந் திருநாடே. 20

இத்தகைய திருநாட்டில் எரிவிழியைத் திறவாதே
முத்தனைய முறுவலினால் முப்புரத்தை யெரித்தருளும்
பத்தரையே புரந்தபிரான் பழமைபொலி திருக்கோயில்
சித்தமுற வுவந்தருளும் திருவதிகை யுளதாலோ. 21

அட்டவீ ரட்டமென அருணெறியோர் புகல்கின்ற
சிட்டர்வதி சிவதலங்கள் சிறந்தனவெட்டுள வவற்றுள்
வட்டமதி மிலைந்தபிரான் வஞ்சர்திரி புரமழித்த
கொட்டமணம் கமழதிகை குவலயத்துச் சிவபுரமே. 22

திருவதிகைத் திருப்பதியின் சிறப்புரைத்த லெளிதாமோ
கருவதிகைத் துயரொழியக் கண்ணுதலைச் சார்ந்ததொண்டர்
உருவதிகைத் தலையளியின் உருவமென உழவாரத்
தருவதிகைத் திருத்தொண்டு தனைப்புரிந்த தலமன்றோ. 23

திருநாவுக் கரசர்பணி செகமுணருந் திருவதிகை
திருநாவுக் கரசர்பிணி தீர்த்தருளும் திருவதிகை
திருநாவுக் கரசர் தமிழ்த் திறந்தெரிந்த திருவதிகை
திருநாவுக் கரசர் பெயர் சிவனுரைத்த திருவதிகை. 24

பூவுலக சிவபுரமாம் பொலியுமொரு திருவதிகைத்
தேவுறையுந் திருக்கோயில் திருச்சாயை வீழவளர்
மாவுறையும் வளநகர்கள் வனையவுள பலவவற்றுள்
கோவுறையும் சிறப்புடைய கோட்டிலாம் பாக்கமொன்றே. 25

கோட்டிலாம் பாக்கமென்றே குணமுணர்ந்தோர் புகழுநகர்
ஏட்டிலாம் பாக்களெலா மிசைப்பரிய சிறப்புளது
பாட்டிலாம் பொருளனைத்தும் பணிந்து புகுந்திறத்தினது
நாட்டிலாம் புதுமையெலாம் நணுகவமை பழமையதே. 26

பழமையொடு புதுமைநலம் பயின்றதிரு நகரதனைத்
துழனிபெற மறைமுழங்கு தூப்புலினார் பண்டுசெஞ்சிக்
கிழமைபெறு மரசர்தரும் கேடில்சுரோத்திரிய மென
அழனெறியை வளர்ப்பதற்கே யடைந்து நன்கு வாழ்ந்தனரே. 27

தொண்டைமன்னர் திருநாட்டில் தூப்புலார் பெருமரபு
பண்டையரும் புகழ்மலியப் பல்லாண்டு வாழ்ந்ததுவே
கொண்டைமலர் பொலிகாம கோடிபெறும் பெருமாட்டி
தண்டையணி கழற்கடிமை சார்ந்தபெரு மரபதுவே. 28

இராமபிரான் அடிநிலைக்கோ ரிரவகத்தே யாபிரம்பா
வராபரணம் புனைந்ததிரு வாக்குடையார் வைணவத்தின்
பராவரமெய்ப் பொருள் தெளித்த பண்புடையார் அபயவுண்மை
சுராசுரரும் வியப்பவருள் தூயவர்தம் மரபதுவே. 29

நவமணியாற் கேடகமா நற்பணியைப் புரவனார்
உவகையினால் அணிக்கவடைந் துயர்புலமை பூண்டிருந்த
தவமலி சீனிவாசரெனும் சாத்திரந்தேர் தீக்கிதர்தாம்
சிவமயமா மிம்மரபின் சிறப்பறியத் தோன்றினரே. 30

இரத்தின கேடகமணிந்த இசைச் சீனி வாசவரர்
புரத்தினையே நகைத் தெரித்த புண்ணியனை மணந்த கொம்பு
சிரத்தினையே யுளத்தினையே சேரவமைத் தனவரதம்
வரத்தினையே நினைந்து பணிமனப்பண்பு பூண்டனரே. 31

இறைவிதிரு வருள்புனைதற் கிசைந்ததிரு மந்திரத்தை
மறைமுதல்வர் தரவடைந்து மனத்தானே யுருவேற்றி
முறைபிழையா தோதியதால் முதல்விகடை விழிநோக்கின்
நிறைபருளுக் குரியவராய் நிலவுலகி லிருந்தனரே. 32

செஞ்சியிறை யவைக்களத்தே சிறப்புறுமாப் புலவருளே
அஞ்சிலம்பை யணிகழலி னமலைதிரு வருட்சிறப்பால்
விஞ்சியமாப் புகழ் பொருந்தி மேதகவா லமர்ந்திருந்தார்
எஞ்சியவர் பொறுமையெனும் எரிவளர்த்தார் அகத்தன்றே. 33

நறுவளரு மலர்க்குழலி நட்டமிடு மிதயத்தார்
இருல்வளரு மதுநிகர்த்த இனியவட மொழிக் கவிதை
மருதிறைவி மலர்க்கழற்கே வாய்ப்புறவே சூட்டியதால்
உறுதபெரு வாழ்வையெலா முறவுரிய ராயினரே. 34

ஒருமாலைப் பொழுதினிலே உவமையகல் புலவரிவர்
திருமாலைச் சிவபரனைச் சிவையினோடு தியானித்தே
பெருமாலைப் புரவலன்றன் பேரவையி லிருக்கையிலே
பொருமாலைப் புலவர்சிலர் புலவழக்கு நினைந்தனரே. 35

ஆரியர்நீர் இன்றுதிதி யறிவீரே யியம்புமென
சீரியர்தம் மனநிலையைத் தெளியாதே யவர்கேட்ப,
வீரியநா வலவரிவர் விளம்பினர்பூர ணையெனவே
காரியவா தியரவர்தாம் கதுமெனவே நகைத்தனரே. 36

இறைவிகழற் றுணைதுணையென் றிருக்குமிவர் திருவாக்கில்
இறைவிதிரு வருளாலே யெழுந்தமொழி யதுவாக
இறைவியருள் தனையறியா இயற்புல்வர் எலாங்கூடி
இறைவிகழ லாணைதிதி யின்றமா வாசை யென்றார் 37

தேவிதிருக் கழலாணை திதியமா வாசையென்றீர்
தேவிதிருக் கழலாணை திதிநிறையு மூவாவென்பேன்
தேவிதிருக் கழல்பிடித்த சிறியேன்வாக் கொரு நாளும்
தேவிதிருக் கழல்துணையாற் சிறியபொய்யும் புகலாதே 38

பொய்புகலா விரதமுளேன் பூரணையே யென்பலியான்
மெய்புகல்வீர் அமாவாசை விளையுமென விளம்புகின்றீர்
செய்பொதுளும் திருநாட்டின் திறமலியும் வேந்தனோடு
மைபுகுதும் கடற்கரைக்கு வந்துமெய்ம்மை தெளிவீரே. 39

எனவுரைத்தார் அரசினொடும் எழுந்தனரப் புலவரெலாம்
கனவுரைத்த கதைமெய்ம்மை காட்டுறவே துணிபவர்போல்
கனவுரைத்த புரவலனும் நரவலரும் பின்தொடர
வினவுரைத்த வேதியனார் வீரையரு கணைந்தனரே. 40

கல்லினையே தெப்பமெனக் கண்ணுதலார் மாற்றியருள்
சொல்லினையே துணைபிடித்த தூயமுனி வாகீசர்
செல்லினையே நிரப்புபுனல் திருமலிபா திரிப்புலியூர்
எல்லினையே விளக்குகடல் எதிர்ந்தகரை யணைந்தனரே. 41

திரைக்கடலின் கரையினிலே செஞ்சியிறை புலவரொடு
வரைக்கடங்கா வருட்புலமை வாய்ந்தவரோ டிருக்கையிலே
வரைக்கொடியை மனத்திருத்தி வடமொழியாற் புகழ்புனைந்து
தரைக்கடைந்து தந்தருளும் தாடங்க மடைந்தனரே. 42

அடைந்ததிருத் தாடங்க மதனையவ ரெலாங்காண
விடைந்தவலை சுருள்கடலில் வீசினர்வீ சியவளவில்
கடைந்ததிருப் பாற்கடலிற் கலைகளொடு மெழுந்திங்கள்
இடைந்தகல எழுந்ததுவே எல்லொளிய நல்லணியே. 43

அமையெனும்பே ரிருளில் அமலைதிரு வருளாலே
சிமையமுடி யமர்ந்தபிரான் திருவிழியாம் வெண்டிங்கள்
அமையவெழுந் தறுமழகை அரசினொடு புலவர்கண்டு
தமைமறந்து சீனிவா சாரியர்தாள் தாழ்ந்தனரே. 44

இன்னபெருந் திருப்பொருந்தும் இசைப்புலவர் தமக்கன்றே.
மன்னவனும் சுரோத்திரிய வாழ்வெனவே நல்கியவூர்
பன்னலங்கொள் கோட்டிலாம் பாக்கமெனும் வரலாறு
தன்னலமே யறியகிலாத் தவசிசொல வறிதுமன்றே. 45

தூப்புலினூர் குலமொன்றே தூய்மைமலி மறைப்பணியை
யாப்புறவே பொருந்தியினி திருக்கவெனச் செஞ்சியிறை
தாப்புலியை மதியாத தாளாளர் நிறுவியதாம்
கோப்புடைய சுரோத்திரியம் கோட்டிலாம் பாக்கமன்றே. 46

அந்நகரிற் சிவனருளும் அரிபிரமர் திருவருளும்
தந்நலமே தாவாழ்ந்த தகவுடைய வந்தணருள்
செந்நெறிய தவச் சிறப்பார் திருவிசுவா மித்திரனூர்
எந்நெறியின் முதல்வரென இசைந்தமர பிம்மரமே. 47

இசைமலிந்த பெருப்புலவர் இரத்தினகேடகர்மரபு
பசைமலிந்த வாழ்வுடைய பலர்பிறந்த திருமரபு
நசைமலிந்த வில்லறத்தார் நசைசுழிந்த துறவறத்தார்
குசைமலிந்த நுண்ணறிவர் குழுமியகற் றிருமரபே. 48

சாத்திரமே தெளிந்தவர்தம் தலைவணங்கு குலமஃதே
கோத்திரமே காதிசுதர் கொடுத்தபெருங் குலமஃதே
தோத்திரமே பரம்பொருட்குத் தொடுத்தபெருங் குலமஃதே
நாத்திரமே சத்துவவ்வாழ் ஞானமலி குலமஃதே. 49

வடமர்திரு வகுப்பினிலே மறைதெளிந்த முனிமரபில்
புடவியிடை மிகுந்தபுகழ் பொருந்து மிந்த மரபினிலே
கடனறிந்து மனையறத்தே கழிந்தபல ரிருந்தாலும்
வடமமர்ந்த முனியருளால் மாறினவர் பலரன்றே. 50

புரவலரால் மதிப்படைந்து புகழ்பொருந்து தீக்கிதர்தம்
மரபினிலே பன்னிருவர் வந்தபினர் வழிவருவார்
கரவறியா மனமுடையர் கலையறிந்த வுளமுடையர்
அரவணிவா னடிபணியு மமைதியின ரொருவரென்ப. 51

உரைசாலு மரும்புலமை யொருபொருள்தேர் மெய்யறிவே
அரைசாலு முலகாலு மருமை தெளி பாராட்டு
வரைசாலு மதிச்சிறப்பு வாய்த்திருந்த மரபிதன்கண்
துரைசாமி தீக்கிதராச் சொல்லுவரப் பெரியரையே. 52

துறவாசர் பலர்பிறந்த தொல்குலத்தில் வேள்வி நெறி
அறமலிய மறைநெறியே யாற்றியவப் பெருங்குலத்தில்
நிறமலியு நீற்றொளியு நிறையொளியும் பெறுமவர்தாம்
புறமலியு மகமலியும் புத்திரரை யடைந்தனரே. 53

இராமபிரான் திருப்பெயரால் இவர்படைத்த முதல்மைந்தர்
இராமபிரான் திருத்தேவி இனியபெயர் பெறுமகளை
இராமபிரான் திருவருளால் இலத்துணையாக் கொண்டனரே.
இராமபிரான் எவையுமென்றே யெண்ணிமன மகிழ்ந்தனரே. 54

இறைசிவனை யரியுருவை யேகமென வுணருநராய்
மறைமுடியி னருப்பொருளை மனக்கோயி னிறுவுநராய்
நறைபொதுளு மலர் வகையால் நம்பனையே வணங்குநராய்
முறைநெறியில் வாழ்ந்திருந்தார் முனிகுலத்து வேதியரே. 55

மனைநலஞன் கமைசீதை வாழ்வினமை துணையாக
முனைவனருள் துணைபுரிய முதன்மைதரு மகப்பேறு
தனையடையும் சீராம சாமியெனும் பூசுரர்தாம்
புனைகலன்கள் புனைந்தந்தப் புதல்வர்தமைப் போற்றினரே. 56

அத்திரிமா முனியரசு மநசூயை யணங்காசும்
அத்திசூழ் வனத்திடையே அன்றுபெறு மொருமதலை
பத்திரமா மறைநுணுக்கம் பகர்ந்தமுனி மரபினிலே
சித்திரமே யெனப்புகுதும் திருமதலை வளர்ந்தனரே. 57

தத்தமுனி சுகப்பிரமம் சதாசிவமாம் பிரமமென
உத்தமரே புகழ்ந்துரைக்கும் உயர்குலத்து முனிமரபில்
சித்தமுற வொருமைதெளி சீரியர்பற் பலரிருந்தார்
அத்தகைய திருமரபின் அறமவனி விளக்குவதே. 58

துளக்கமறத் துறவுகொண்டு தூய்மையுரு வெனவிளங்கும்
விளக்கமுறு முனிமரபில் வேதமுடி புணர்ந்துசிவம்
களக்கமற வடைவதற்கே கருவிஓறு திருமதலை
அளக்கர்புடை சூழுலகில் அருமையுற வளர்ந்ததுவே. 59

சாதகரு மாதியெலாம் தகுபருவத் தடைந்தபினர்
வேதமுறை பொருணுணுக்கம் மிக்கவராற் செவியேற்றே
ஏதமறு தென்மொழியும் இதயமுருகுறப்பயின்று
போதமுறு நெறிபடரும் புண்ணியமே யெனவளர்ந்தார். 60

பிரமமெனும் பொருளுணரப் பிரமமெனும் பெருநூலை
வரமருளும் முனிவரரோ வுகுத்தவணம் தெளிந்தபினர்
உரமலியும் உலகநிலைக் கூற்றமெனு மாங்கிலத்தைக்
கரமமரு நெல்லியெனக் கற்றனரப் பாலகரே. 61

பாத்திரமே யிவரென்று பட்டநா ராயணராம்
சாத்திரியார் கீதைதரும் தத்துவங்கள் உணர்த்தினரே.
கோத்திரமா முனிவரைப்போற் கோதண்ட பாணிபக்கல்
சூத்திரமே நிகருமன்பாற் றொடர்புண்டு வாழ்ந்தனரே. 62

தந்தைசொலைக் கடவாத தனயரெனும் புகழ்பூண்டார்
சிந்தைமனை யறந்தாங்கச் சேராதே பிரிந்திருந்தும்
முந்தைமுறை குலம்வளரு முறைபுரிக வெனவவர்தாம்
சந்தைபெறு மறைமொழியாற் சாற்றியது கேட்டனரே. 63

தகுந்தகுல மொன்றினிலே தகுங்குணத்து மாதரசை
மிகுந்தகுண முடையதந்தை வேட்பிக்க வேட்டனரே
புகுந்தகுலம் பிறந்தகுலம் புகழ்பெறவே வருமங்கை
இகந்தமன முடையவரை யேற்றனளே தலைவரென்றே. 64

சொல்லாண்ட முனிவர்தரு தூய்மைதெளி வுறுமனத்தர்
பல்லாண்டு முயன்றுபெறும் பாச்சாத்திய கலையறிவால்
நல்லாண்டில் நன்னாளில் நற்றொழிலிற் புகுந்தனரே
சில்லாண்டில் அதன்பற்றும் செயலறவே வாழ்ந்தனரே. 65

வில்லாண்ட நுதல்மனைவி வேதமுரைத் தருள்நெறியே
சொல்லாண்டு வாழ்குலத்தின் தூய்மைமலி பணிபூண்டும்
இல்லாண்டு மயங்குமனம் இலாமையினால் மனையறத்தே
செல்லாண்ட வானமெனச் சேராது சேர்ந்திருந்தார். 66

இல்லறமே புகுந்தாலும் இறைமைதரு துறவறத்தை
நல்லறமே யெனத்துணிந்த ஞானமூள ராதலினால்
வில்லறமே தெளிவிசயன் வேதமுடி புணரவருள்
தொல்லறமே பூண்டவனைத் துருவுமனத் தொடுமிருந்தார். 67

அன்னையினை யைந்தாண்டுள் அரனடிக்கே யுய்த்ததனாற்
பின்னைவரு சிற்றன்னை பேணவளர் பெருமகனார்
தன்னைநிகர் **வேறிலதாம் தத்துவத்தே** மனமிருத்தி
மின்னைநிகர் **இல்வாழ்வை வேண்டாது வாழ்ந்தனரே.** 68

பெரும்புளிய மாத்தினிலே பிஞ்சாகிக் காயாகி
வரும்பெரிய கனியாகி வளருமொரு பலத்தினிலே
அரும்பெரிய கனிவடைய அகப்பொரு தான்புறத்தோலை
இரும்பெரிய தொடர்பிருந்தும் இசையாது பிரியுமன்றே. 69

அவ்வணமே தந்தைமொழி யன்னைமொழி கடப்பூண்டு
செவ்வணமே யில்லறத்திற் சேர்ந்திருந்தும் செம்மனத்தார்
பௌவமெனும் சமுசார பந்தமறும் துறவினுக்கே
கவ்வவரும் மனத்தினொடு காலமெலாம் போக்கினரே. 70

சித்தநிலை மைந்தரது தெளிந்ததந்தை மரபுமுறை
சத்தபிர மாணமெனும் சதுர்மறையே புகன்றவணம்
ஒத்தமைய வளராமை யுணர்ந்துமன மிகநொந்தே
மத்தமணி சிவன்சேந்த மங்கலத்தை யணுகினரே. 71

தத்தமுனி மரபினிலே தமையுணரும் தவம்பூண்டு
சித்தரெனும் புகழ்பூண்ட திருச்சேந்த மங்கலத்து
முத்தர்கழல் பணிந்துமன முழுதுநிறை கருத்துரைத்து
வைத்தநிதி நிகர்ப்பவொரு மகவுளதோ விவற்கென்றார். 72

மனந்துறவில் நிலைத்தவர்க்கு மகப்பேறு விளையாமை
நினைந்துறவு முறைமறந்த நீண்டபெருந் தவமுனிவர்
கனந்தழுவு திருமேனிக் காகுத்த னுருமறவா
மனந்தனையே யுடையதந்தை மருட்சியற வழங்குவரே. 73

ஐயநின்றன் மதலைமனை யறத்தினிலே யிருப்பதுண்மை
வையநெறி வாழ்வதுவும் மற்றுநீர் நன்கறிவீர்
வெய்யவினைத் தொடர்பறுத்து வீடுபெறும் தகுதியுளான்
செய்யசிறுவாய்க்குதலைச் சிறுவரையே பெருமைநன்றே. 74

பற்றறவே பலபிறவி படிந்துவரு நிலையுடையான்
பற்றுறவே மகப்பேறு படையாமை குறைபரமோ
வெற்றுறவே யுலகிலுள மிக்கசுற்ற மெனவுணரும்
நற்றுறவி னெறிப்பெருமை ஞானமுளா யறிகிலையோ. 75

தாதிமனம் செல்வர்குலத் தனையனைக்கை யேந்துகையில்
கோதியளும் தனதுசிறு குழவியையே நினைந்துருகும்
சாதியறம் நிலையறமே தாங்கிடினும் துறவகத்தே
மோதிவரு தொடர்புடையார் முழுகுவரோ வாழ்வினிலே. 76

எழுபதின்மேல் உயிர்வாழ்ந்தேன் எனது மகன் மகன்வரவு
வழுவறவே காண்பதற்கு வாய்த்திலதே யெனவருந்தும்
பழுதறவே பரமனது பரமகரு ணையைநினைந்து
தழுவுவதற் குரியதவன் சரணமென வாழுதியே. 77

எனவருளு முனிவர்கழல் இருமையினைத் தலைசேர்த்து
மனவமைதி யடைந்ததந்தை மடங்கினர்தம் அகரத்தே
நனவுகன வருந்துயிலில் நம்பனையே நினைபவராய்
வினவரிய பொருள்தெளிந்து மெய்ந்நெறிக்கு நடந்தனரே. 78

பிறந்தவுயிர் எதுவேனும் பிறப்பித்தான் அருள்வழியே
இறந்தழிதல் உளதேனும் இறைபருளால் வீடடைதல்
சிறந்ததென வுணர்ந்தவவர் சித்தநிறை யமைதியொடு
மறந்ததுய ரினராகி வள்ளல்கழல் புகுந்தனரே. 79

தந்தையெனு முறவுபுனை சான்றவர்க்கு மறைமுறையே
மைந்தரெனு முலவுபுனை மனந்தூயோர் கடனெல்லாம்
வந்தமறை யவர்வகுத்த வகையானே யியற்றிவிட்டார்.
சிந்தைதளர் வகன்றுமனைச் செல்வியொடு யிருந்தனரே. 80

சிற்றனையு மோராண்டிற் சிவவுலகு புகுந்ததனாற்
பற்றமையு மனைத்தலைவி பரமபதம் புகுந்ததனால்
உற்றவுற வெனுமவருக் குரியகட னெலாமியற்றி
நற்றவமே யினித்தகுதி நமக்கெனவே புறப்பட்டார். 81

மனையறமே புகுந்திருந்தும் மனம்பொருந்தா திருந்தவிவர்
நினையுலகு புகல்பழியை நெஞ்சாலு மதியாத
புனையுமுடை கோவணமே போர்வையொரு துணியாக
வனையுமணி பிறவின்றி மவுனமொடு நடந்தனரே. 82

துறவுகர வல்லகுரு தோன்றுவதெங் கெனநாடி
அறவுருவ மறையோர்கள் அகரங்கள் ஐயமிட
உறவுமுறை நினையாதே ஒருவகைய வூர்தியையும்
பெறநினையு நினைவின்றிப் பேருலகில் நடந்தனரே. 83

உருச்சேர்ந்த தெய்வதமும் உருவமிலாத் தெய்வதமும்
கருச்சேர்ந்த குறையொழியும் கருணைதரு மெனத்துணிந்து
திருச்சேர்ந்த மங்கலத்தே சிவமயமாய் அமர்ந்திருந்த
தருச்சேர்ந்த ஆசிரமச் சாமியினைச் சார்ந்தனரே. 84

தூய்மையொளி விளங்குமன்ன சுயப்பிரகா சானந்தர்
தாய்மையொடு கருணையொடு தமையணுகு மிவர்தம்மைச்
சேய்மையற வண்மையிலே சேர்த்தினி துறநோக்கி
வாய்மையுற வருள்மொழியும் வழங்கினரால் மனங்கனிந்தே 85

ஐயதுற வமைதிநினை யடைந்துளது தத்தமுனி
செய்யதிரு மரபுபுகும் சிறப்புநினக் குரியதுவாம்
வெய்யமொழி யெனநினையேல் வேறொருவர் வடநாட்டில்
உய்யநினக் குரியதுற வுதவு தற்கிருப்பரன்றே. 86

சிருங்ககிரி யடைந்துசந்திர சேகரபா ரதிகழல்கள்
ஒருங்குமன முறவணங்கி உரியமனுத் தரப்பெற்றே
பிருங்கமது மலர்நாடும் பெற்றியெனப் பகீரதிபாய்
தருங்கரையிற் காசியிலே சார்திகுரு வரரையென்றார். 87

அருளாணை யிஃதெனவே யறிந்தவிவர் கால்நடையாய்
மருளாணை மிகுமுலக மக்கள்தொடர் பகல்வதற்கே
இருளாணை யகற்றுமொளி யிறையருளா லிலங்குவதால்
தெருளாணை பெறுஞ்சிறந்த சிருங்ககிரி யணைந்தனரே. 88

சாரதையை மனமாரத் தலையார வழிபட்டே
நாரதரைக் கலைக்கோட்டு ஞானியினைப் போலிருந்த
பாரதியாம் பட்டமுள பண்ணவரைக் குருவரைத்
தீரதர மனமுடனே சேவித்து நின்றனரே. 89

பத்தர்பலர் அனுகவவர் பண்பறிந்து நலமருளும்
சித்தர்பிரான் திருச்சந்திர சேகரபா ரதிமுனிவர்
தத்தமுனி மரபுபுகும் தகுதியுள விவர்தமக்கே
தத்ததுவா தசாக்கரியாம் தலைமைமனு வருளினரே. 90

மந்திரமே தெய்வமென மதிக்குமன முடையவிவர்
சந்திரசே கரமுனிவர் தருமெழுத்தை மனத்தேற்றி
தந்திரசா தனமறியாச் சாந்தமனத் துணிவாலே
இந்திரனே யெனவணிகர் இலங்குநகர் பலகடந்தார். 91

பாண்டவர்கள் பண்டரசு படைத்தநகர் நடந்துவந்தார்
காண்டகைய வொருசெல்வன் கைகாட்டக் கங்கைநதி .
ஆண்டவரித் துவாரமதை யடைந்துபுனல் மூழ்கிமனம்
தூண்டவதன் வடக்கினிலும் துணிவினொடு நடந்தனரே. 92

வதரிமுடி யடைந்திறையை வணங்கியருட் கேதாரம்
அதனிலமர் சிவபரத்தை அருளுருவை யிறைஞ்சியுலகு
இதமடைய நேபாளத் தெழுந்தருளும் பசுபதியை
முதமுறவே வணங்கிவந்து முத்திநகர் குறுகினரே. 93

இமயமுடி சிவமயமாய் எழுந்தனவைந் தெனவுரைப்பர்
சமயமுடி புணர்த்துமவை தமுளொரு மூன்றிவர்தொழுதார்
இமயமிசை பிரயாகை யெலாம்புகுந்து பணிந்துள்ளார்
சமயமுடி யுணர்வுரியார் சாதிப்ப தரிதேயோ. 94

கண்ணனது விருந்தைவனம் காகுத்தன் அயோத்திநகர்
வண்ணமுறு வழிவரிய வள்ளல்திருத் தளிகள்பல
எண்ணமெலா மறைமுடிக்கே யேற்றுமிவர் தரிசித்து
நண்ணவரு துறவுதரு ஞானியினை நாடினரே. 95

மாசில்மனத் துறவொன்றே வழிகாட்ட நடக்குமிவர்
காசியெனுந் திருநகரைக் கண்டுதலை வணங்கினரே
தேசில்மிகு துறவுபெறும் தேசிகனார் தமைத்தேடி
வாசிபெறு மனத்தினொடு வாரணசி புகுந்தனரே. 96

கங்கையினை மனமாரக் கரங்குவித்து வணங்கினரே
கங்கையினை முடியேற்ற கடவுளையும் வணங்கினரே
கங்கையினில் வருமோடக் காட்சியினைக் கண்டனரே
கங்கை தரும் திப்பியமாம் காற்றினையே பருகினரே. 97

நாணாளும் நடந்திளைத்து ஞானகுரு வர்திருமுன்
நாணாது நெருங்குமொரு நாள்வருவ தென்றெனவே
பூணாம் அரவமெனப் பூண்டபிரான் கோயிலையே
கோணாது வலம்வந்து கும்பிட்டு வேண்டினரே. 98

அவிமுத்த தலம்புகுந்தும் அன்புருவை வணங்கினின்று
குவிமுத்த குருவரரைக் கொடுக்குமொரு குறிப்பிலையோ
சவிமுத்தம் சங்கினும் சானவியின் கரைக்கண்ணே
செவிமுத்த மந்திரமே சேராது பயனென்னே. 99

எனவிரங்கி மனந்தளர்வுற் றிங்குமங்கு நோக்குகையில்
மனமிரங்கு சிவனுருவோ மாதவன்றன் உருவேயோ
மனவரங்கில் நடமாடும் வள்ளலது திருவுருவோ
கனவரங்கள் தருமிறைவி கனிவுருவோ வெனுமாறு. 100

இராமமயம் எவையுமென விசைக்கின்ற குறிப்பாலே
இராமனது திருநாமம் எம்மருங்கும் எழுதிநின்ற
இராமமய வோடமதில் எழில்பழுத்த முதுமையொடும்
இராமசபம் இயற்றுகின்ற எதிவரரை நோக்கினரே. 101

நூற்றிருபா ணுண்டுலகில் நோன்புறவே துறவறத்தில்
மாற்றுயரும் பொன்போல வயங்குமரி யரானந்தர்
தேற்றுபொருள் வாய்திறந்து செப்பமன மிலாமவுனி
தோற்றுவது கண்டிவரும் தொழுதுகரம் கூப்பினரே. 102

வங்கமிசை யணைந்தவரை வலம்வந்து வணங்கினரே
சங்கமுறு மன்பரிடைத் தமக்குமிடம் தரப்பெற்ருர்
அங்கமெலா மமுதமயம் ஆகவமர் துறவரசைப்
பங்கமறு கருத்தானே பணிந்தெழுந்தார் பலமுறையே. 103

அறவுருவே யன்புருவே யருளுருவே யறிவுருவே
புறமகமே யொருபொருளிற் பொதிவித்த பெருங்குருவே
துறவருளி யடியேனைத் தொழும்பாக்க வேண்டுமென
உறவகல நோன்புபுரி யுத்தமரு முரைத்தனரே. 104

பன்னூறு நாள்நடந்தும் பழந்தவத்துக் குருவரனர்
முன்னூறு மனித்தருக்கு மொழிதருவ தில்லையென்று
கொன்னூறு நாவுடையர் கூறியது கேட்டபினும்
மன்னூறு மந்திரமே மனநிறுத்தி நின்றனரே. 105

கண்டிறந்து முனியரசு கருணைமொழி தரப்பெற்ருர்
மண்பிறந்த பெரும்பேறு வாய்த்ததென நினைத்தனரே
பண்டிறந்த நாள்நினைந்து பலவாறு மனமிரங்கி
எண்டிறந்த கருவூலத் தேற்றினரக் குரவரையே. 106

பற்பலநாள் அவர்திருமுன் பணிவினெடு நடந்தனரே
சொற்பயிலா மவுனியிவர் துறவுள்ளம நன்குணர்ந்து
அற்பகலம் அறிவதற்கா ஆறேழு நாள்நடத்திப்
பொற்பயையும் வாய்திறந்து போதுகநீ நாளையென்ருர். 107

மற்றையநாள் வந்தளவில் வளர்வெயிலில் முண்டிதராய்
வெற்றுடலோ டரும்பொறுமை வேண்டுமென்றுசோதித்தே
பற்றறவே துறந்தரிய பரமனருள் பெறுகவென
முற்றறிவர் ஆனந்த முதுமொழியை அருளினரே. 108

அரியரவா னந்தரெனும் ஆத்துமஞானி யர்பெருமான்
பரிவுறவே யிராமபத்தி பயின்றகுலம் வருமிவர்க்கு
விரிவுறவே துறவுநெறி மேன்மைகளை யுரைத்தருளி
அரியதுற வருளியன்றே ஆட்கொண்டார் அருளாலே. 109

கவுடபதர் மரபில்வரும் கமைகொளரி யரானந்தர்
தவிடுபட வுலகமயல் தனையொழிந்து வாழ்தியென
பவிடியமும் உணர்ந்ததனுற் பயிலுமிராமானந்தம்
சுவடுபெறு பெயர்சூட்டித் துறவருளி வாழ்த்தினரே. 110

யாண்டிருந்தோ காசிநகர் எய்தினையே புண்ணியமே
நீண்டிருந்தா லன்றியின்ன நிலையெவர்க்கும் வாயாதே
மாண்டிறந்த வுறவுகளை மனத்தாலும் நினையாதே
பூண்டிருந்த கோலத்தின் புகழ்வளர வாழ்கவென்றார். 111

தண்டகமண் டலமிலையே தரிப்பதொரு காவியிலை
கொண்டதுற விதுவெனவே கூறுகின்றேன் தெளிவாயே
வண்டார்புகு மலர்மதுவை வைத்திருத்தல் இலையாலோ
மண்டலமார் உறவுபுகு மனமடங்கல் இலையாலோ 112

திகம்பரரே யாமறிதி சிதம்பரமே யெமதுநிலை
அகம்புறமே வேறென்றும் அறியோமே யொன்றுளது
சகம்புகுவே மாயினும்யாம் சகம்பிரிந்த வாழ்வுடையேம்
சுகம்பெறவேநினைவாயேல் சுத்தசிவ நினைவுறுக. 113

நாமவுரு விலாவொருமை ஞானமய வொளியதனை
நாமவுரு வாயிரத்தால் நணுகவெளி தெனநினைப்பர்
ஏமவுரு வருவமெலாம் ஏகமெனத் தெளிவுறுக.
காமவுரு வறவொழித்துக் கடவுண்மை யுறவாழ்க. 114

எனவருளி யுலகமெலாம் ஏகுகென விடையருள
மனமருளு மரும்பொருளை வழங்குவ்வள்ளல் கழல்பணிந்து
கனவருளும் கனவருளும் நாயகமா ஞானமுனி
உனவருளும் தத்தமனு உருவேற்றி நடந்தனரே. 115

குருவாஞர் அவதூத கோலமே கொண்டிருந்தும்
அருகுறுவார் அருவருப்பர் ஆதலிஞற் காவியுடை
பெருகுறவே போர்த்தடிகள் பெயர்நினைந்து நடக்கின்ருர்
உருகுமன மொடுதலங்கள் ஒவ்வொன்று நோக்கினரே.
116

கங்கையிரு கரைமருங்கும் காண்புரிய தலங்களையும்
மங்கையிடப் பாலுடையான் வாழ்வுறுவே றிடங்களையும்
சங்கையற மறைப்பொருளைத் தருங்கண்ணன் இராமபிரான்
மங்கையொடு கோயில்கொளும் வாழ்வினையும் வணங்கினரே.
117

இமயமலை முடிமீதும் எழில்மலியும் வனங்களிலும்
தமையறியு நினைவாலே தவவுருவா நடந்தனரே
சமையமுடி புணர்த்துகுரு தண்ணருளே நினைந்துருகி
இமையளவும் வறிதுசெலா திறைநினைப் பிலாழ்ந்தனரே. 118

காசுமிர முதலாய் கார்மலைசூழ் நாடுகளை
மாசுதவிர் மனமுடையார் மறைப்பொருளே தருவுமவர்
தேசுமலி குரவர்பிரான் திருவருளே நினைந்துசென்ருர்
வீசுபுகழ் நேபாள வேந்துறவு மடைந்தனரே. 119

வடவர்மிகு நாட்டகத்தே மறைதெளிந்த துறவரசர்
அடவிமலை நதிக்கரையென் றறியாது நடந்ததஞல்
புடவியிடை யருந்துறவின் பொலிவெனவே தோன்றிமனம்
படவணையும் சீடர்பலர் பரவவமை புகழ்பூண்டார். 120

தென்ஞடு திரும்பிவந்து சேந்தமங்கலம் புகுந்து
பொன்ஞடும் பிறநாடும் போற்றவுயர் நிலையடைந்த
மன்ஞடு பெருந்தவத்து மாதவர்தாள் போற்றிநின்றே
பின்ஞடு பணிபூணப்பிறநாடு நடந்தனரே. 121

தத்தமுனி சக்கரமும் தகுதிபெறு மற்ருென்றும்
வைத்தவிரு பாதுகையும் வளர்தளி யொன்றமைவதற்கே
ஒத்ததலம் நாடிமனம் உவந்தசய காளிபுரத்
தெத்தவரும் பாராட்ட இரும்பணியைப் புரிந்தனரே. 122

ஆண்டுதொறுந் தத்தமுனிக் கமைவிழா நடைபெறவே
தூண்டுபெருந் தனமுடையார் துணைமைபெற முயல்வாராய்
நீண்டுநிலே பெறுங்கோயில் நிமிர்ந்தபல பதிகடொறும்
பூண்டுளதம் கடமைநின்ற பொறுப்புடனே நடந்தனரே. 123

பாதுகையே சக்கரமே பரமனது கோயிலிலே
போதுமலர் அரும்புகளாற் பூசனையை யேற்றிருத்தல்
வாதுவளர் விடமெனமே மனங்கருதி யாலயமும்
தீதுதவிர் திருமடமும் சிறப்புறவே யமைத்தனரே. 124

தத்தகுரு வரமரபிற் சந்திரசேகரமுனிவர்
வைத்ததிரு வருளினெடு வாரணசி யரியரனர்
சித்தமுறு திருவருளும் சேந்தனுரை மங்கலத்து
முத்தர் திருவருளுமடை முனிவரிவர் தவம்பெரிதே. 125

வாழ்க விரா மானந்த மாதவனர் திருக்கழல்கள்
வாழ்க விராமானந்த மாதவனர் திருப்பணிகள்
வாழ்க விராமானந்த மாதவனர் தவச்செல்வம்
வாழ்க விராமானந்த மாதவனர் தவமரபே. 126

ஸ்ரீ:

# ஸ்ரீ ராமானந்த சரித்திராமிருதம்

## வசனம்

ஸ்ரீமத் பரமஹம்ஸ ராமானந்த பிரம்மேந்திர ஸ்வாமிகள் என்ற பெயரோடு கும்பகோணத்துக் கருகில் உள்ள சேங்காலிபுரத்தில் தத்தாசிரமும், மடமும் நிறுவியிருக்கும் மகாத்மாவின் சரித்திரம் சுருக்கமாக உரைக்கப்படுகிறது. துறவற நெறியிலே குடீசகன், பஹூதகன், ஹம்ஸன், பரமஹம்சன், பரிவ்ராஜகன் என்ற ஐந்து நிலைகள் உண்டு என்று நூல்கள் கூறும். வருணாசிரம தருமம் தவறாது வாழ்ந்து தகுந்த குருவரிடம் சந்யாஸம் பெற்றுக் காவி வஸ்திரம் ஒன்று அணிந்து ஏகதண்டமும் கமண்டலுவும் உடைய சந்நியாசிகளையே மிகுதியாகக் காண்போம். ஆதி சங்கரர் வகுத்த ஆசிரமம் சம்பிரதாயம் இதுவே.

ஆனால் தத்தாத்ரேயர் என்ற திரிமூர்த்தி அவதார அவதூத யதிசிரேஷ்டரின் பரம்பரையிலே துறவு பூணும் பெருமக்கள் தண்ட கமண்டலம் தாங்கும் விதி இல்லை. காவியுடையும், கௌபீனமும் துறந்து அவதூதர்களாக விளங்குவது அம்மரபின் முறை என்பர். இந்நெறியில் முன்னாளில் இருந்த மகான்கள் தத்தாத்ரேயர், சுகப்பிரம்மம், சதாசிவப் பிரம்மம் என்று கூறுவதுண்டு. சமீப காலத்தில் இவ்வழியில் உயர்வு மிக விளங்கிய பெரியோர் சேந்த மங்கலம் சுவாமிகளே ஆவர். இவர் சேந்தமங்கலத்தில் தத்தகுரு குகாலயம் அமைத்து அவ்வாலயத்தின் கீழ் உள்ள குகையில் இன்னும் அடங்கிக் காட்சி கொடுக்கின்றார்.

ஸ்வயம்பிரகாச பிரம்மேந்திரர் என்ற திருப்பெயர் பூண்ட சேந்தமங்கலம் சுவாமிகள் தமிழகம் செய்த தவத்தின் திருக்கோலம் என்று மதிக்கத் தக்கவர்கள். அவர்கள் அடங்கியிருக்கும் கோலயத்திலே அணுகிப் பணிபூண்டு உயர்வு பெற்ற துறவியர் நம் நாட்டில் இன்று பலராவர். அவரது பரிபூரண அனுக்கிரகத்துக்குப் பாத்திரமான இராமானந்தர் இன்னும் சேந்தமங்கலத்தில் மிக்க பக்தி உள்ளவராய் சேங்காலிபுரத்தில் தத்த குருவரர் கைங்கரியம் புரிவதில் ஈடுபட்டிருக்கிறார். ஆண்டுக்கு ஒருமுறையேனும் சேந்தமங்கலம் சென்று வழிபடும் வழக்கம் உள்ளவராய் இருக்கிறார்.

தண்ட கமண்டலங்கள் இன்றிக் காவியுடை பூண்டு முண்டனம் இன்றி சேந்தமங்கலம் சுவாமிகள் போலவே சடைமுடி வளர்த்து வடக்கே நேபாளம், ரிஷிகேசம், பதரிகாசிரமம், கேதாரம் முதல் தெற்கே கன்னியா குமரி வரை யாத்திரை செய்திருக்கும் இராமானந்த யதீந்திரர் தமிழகத்திலே பல நன்மக்களோடு பயின்றவராய் இருப்பதே அன்றிக் கல்கத்தா பம்பாய் முதலிய நகர்களிலும் வரவேற்கப்படுபவராய் இருக்கிறார்.

திருநாவுக்கரசர் அவதரித்த திருமுனைப்பாடி நாட்டிலே அவர் சூலை நோய் தவிர்த்தருளிய திருவதிகை வீரட்டானத்தை அறியாத தமிழ் மக்கள் இல்லை என்று துணிந்துரைக்கலாம். இந்நாளில் இத்தலம் திருவிதி என்று கூறப்படுகின்றது. திருவதிகைத் திருத்தலத்தின் அருகே புண்ணியமிக்க ஊர்கள் பல உண்டு. அவைகளுள் திருவதிகைக்கு இரண்டு கல் தொலைவில் உள்ள கோட்டிலாம் பாக்கம் பலவகைப் பெருமைகள் பூண்ட சிற்றூராம்.

காஞ்சி நகரிலிருந்து தூப்புலார் குடும்பம் ஒன்று கோட்டிலாம்பாக்கத்தைச் செஞ்சி மன்னரிடம் சுரோத்ரியமாகப் பெற்று வந்து வாழ்ந்தது என்பது வரலாறும். பாதுகா சகஸ்ரம் ஒரு இரவில் பாடிய வேதாந்த தேசிகர்

இத்தூப்புல் வகையார் என்பதை உலகம் அறியும். வைணவர் ஆகுமுன் அவர் குடும்பமும் வடமர் குலமாக இருந்தது. தூப்புல் வடமர் குலத்திலே கி. பி. பதினாறும் நூற்றாண்டில் இரத்தின கேட சீனிவாச தீக்ஷிதர் என்ற ஒருவர் இருந்தார். வடமொழியிலே சிறப்பு மிக்க புலவரான இவர் செஞ்சி மன்னரிடம் தமது புலமையை விளக்கியே இரத்தின கேடகம் என்ற சிறப்பைப் பெற்றவர்.

பல புலவர்களை அவைக்களத்தில் அமர்த்தி ஆனந்தித்த செஞ்சி மன்னர் இரத்தின கேட சீனிவாச தீக்ஷிதரை அப் புலவருள் தலைவர் என்று கருதி மதித்துப் பாராட்டிச் சிறப் பித்து உவந்தார். புலவர் குழுவில் இச்செய்கை பொறாமைத் தீயை வளர்த்தது. அரசவையிலே கூடிய புலவர் ஒரு நாள் சீனிவாச தீக்ஷிதரை நோக்கி "இன்று என்ன திதி?" என்று கேட்டார்கள். உண்மையில் அன்று அமாவாசை திதியாக இருந்தும் அவர் வாக்கிலே தெய்வச் செயலால் இன்று பௌர்ணமி என்ற சொல் புறப்பட்டது.

புலவர் எல்லோரும் குதூகலத்தோடு எழுந்து "புலவர் ஏறே ஆனைக்கும் அடி சறுக்கும் என்ற பழமொழி மெய்யே என்பது இன்று உம் வாக்கால் விளங்குகின்றது. சென்ற பதினைந்து நாட்களும் கிருஷ்ணபக்ஷம் என்பது நீர் அறியாததன்றே. கிருஷ்ணபக்ஷ முடிவில் அமாவாசை வருமா பௌர்ணமி வருமா? இன்று மாலையிலே பூரண சந்திரன் உதயம் உண்டாகும் என்று நம்புகின்றீரா? இங்ஙனம் கூறத் துணிந்த உமக்கு நாங்கள் என்ன சொல்வோம்?" என்று இகழ்ச்சி தோன்ற உரைத்தார்கள்.

இரத்தின கேட தீக்ஷிதரிடம் மிகுந்த மதிப்புக் கொண்டிருந்த செஞ்சி மன்னன் அரங்கநாதர் இப்படியும் நமது சமஸ்தான வித்வத் சிகாமணி வாக்கில் வரலாமா? இந்த மொழிக்குப் பொறுப்பாளி யார்? எங்ஙனம் இவர்க்கு வந்த சிறுமை ஒழியும்?" என்று கவலை கொண் டான். அரசன் முகத்தோற்றத்தை நோக்கிய தீக்ஷிதர்

"அரசே கவலை ஒழிக. இன்று மாலையில் இறைவி அருளால் பூரண சந்திரன் எழும் காட்சியைக் காணலாம். இந்த வித்வத் கோஷ்டியும் அரசர் பெருமானும் அடியேனும் இன்று கடற்கரைக்கு வரவேண்டும் என்பது திரிபுர சுந்தரி யின் திருவுள்ளக் குறிப்பாம். என் வாக்கில் ஒரு நாளும் பொய் வராது. நான் இன்று அமாவாசை என்று அறியாத சிறுவன் இல்லை. இத்துணைப் பெரும் புலவர் கேட்க என் வாக்கில் பௌர்ணமி என்ற சொல் எழுந்தது என் செயலால் அன்று. அவள் அருளால் வந்ததே. இன்று மாலையில் பூரண சந்திரன் உதயமாகும் வண்ணம் இயற்றும் ஆற்றல் என்னையும் உம்மையும் ஆண்ட இறைவிக்கு உண்டு என்றே நம்புகிறேன். ஆதலால் இன்று எல்லாரும் இப் பொழுதே புறப்பட்டுத் திருப்பாதிரிப்புலியூர் செல்வோம்" என்று கூறினர்.

அரசன் 'அவ்வண்ணமே ஆகுக' என்று கூறிப் புலவர் சூழத் திருப்பாதிரிப்புலியூர்க்குப் புறப்பட்டான். விரைந்து செல்லும் ஊர்திகளில் அமர்ந்து எல்லோரும் திருப்பாதிரிப் புலியூர்க் கடற்கரைக்கு வந்தனர். மாலைக் காலம் நெருங் கியது. வானம் இருண்டே இருந்தது. இரத்தின கேட தீக்ஷிதர் கடற்கருகில் நின்று இறைவியை மனமுருகத் துதித் தார். இறைவியின் தாடங்கம் அவர் கைக்கு வந்தது. அதனைப் பெற்ற அப்புலவர் தேவியின் திருவருளை எவரும் அறிய விளக்கும் பொருட்டு அத்தாடங்கத்தைக் கடல் அலைமேல் வீசியெறிந்தார். சிறிது பொழுதில் பூரண சந்திரன் கடலினின்று எழுவது போல அத்தாடங்கமே ஒளிமயமாய் எழுந்தது. வான் எங்கும் நிலவொளி பரந்தது. ஒரு முகூர்த்த காலம் இத்தெய்வக் காட்சி கண்ட புரவலன் இரத்தின கேட தீக்ஷிதரைப் பணிந்து மனநிறையப் புகழ்ந்து கோட்டிலாம்பாக்கம் என்ற கிராமத்தைச் சுரோத்திரிய மாக அளித்தான். புலவர் தலைவரை வணங்கிப் புகழ்ந்து செஞ்சிக்கு மீண்டனர்.

கோட்டிலாம்பாக்கத்தைத் தானமாகப் பெற்ற இரத்தின கேட சீனிவாச தீக்ஷிதர்க்கு இன்றளவும் வமிச பரம்பரை

நடந்து கொண்டிருக்கிறது. இப்பெரியோர் மரபிலே பதின்மூன்றும் தலைமுறையில் துரைசாமி தீக்ஷிதர் என்ற ஒருவர் இருந்தார். இக்குலத்தில் தவநெறி பற்றுவோர் பலர் உண்டு என்பது குலத்தின் வரலாற்றால் விளங்குகிறது இராம பக்தி மிக்க இக்குலத்தினர் இராமனையே சீடராகக் கொண்ட விசுவாமித்திர முனிவர் கோத்திரத்துக்கு உரிமை பெற்றவர் ஆவர்.

வேத சாஸ்திரங்களில் சிறந்த விற்பத்தியும் பரமபதியிடம் பக்தியும் ஞான வைராக்யமும் நிறைந்த இக்குலத்திலேயே பிறந்த துரைச்சாமி தீக்ஷிதர் இராமனையே பரம் பொருளாக மதித்தவர். அவரது மூத்த குமாரர் இராமசுவாமி தீக்ஷிதர் என்ற பெயர் பூண்டிருந்தார். அவர் சீதா லக்ஷ்மி என்ற பெண்மணியை மணந்து இரண்டு மக்களைப் பெற்றவர். அவருள் மூத்தவரே இச்சரித்திர நாயகர் ஆவர். ஐந்து ஆண்டு நிரம்பா முன்னே தாயை இழந்த இத்தனயர் பின்பு மனையிற் புகுந்த சிறிய தாயினால் நன்கு வளர்க்கப் பெற்றார். இவர் சிற்றன்னையைத் தம் அன்னையாகவே நினைத்தார். அப்பெண்மணியும் இவரையே தம் மகனாக நினைத்தார். அவளுக்கும் ஒரு பெண் குழந்தை பிறந்தது.

மூத்த குமாரரான இவர் இளமையில் வடமொழியும் தமிழ் மொழியும் கற்றுப் பிறகு ஆங்கிலத்திலும் தேர்ச்சி பெற்றார். நூற்றுக்கணக்கில் காவிய நாடகங்களை இயற்றிய பட்ட ஸ்ரீ நாராயண சாஸ்திரியாரிடம் பகவத் கீதை கேட்டார். இளமையிலிருந்தே மனம் வைராக்கிய வழியிலே சென்றது. ஆயினும் பதினைந்து வயதிலே தந்தையார் கட்டளைக்கு இணங்கி ஒரு நற்குலச் செல்வியை மணந்தார். ரயில்வேயில் ஒரு உத்யோகமும் வகித்தார். குடும்ப பாரத்தை ஒருவாறு தாங்கினாராயினும் மனம இல்லற ஈடுபடாமலே இருந்து வந்தரா்.

தந்தையார் எழுபது ஆண்டுக்கு மேல் வாழ்ந்திருந்தார். அன்றளவும் தமது புத்திரர்க்கு மகப்பேறு இல்லாமைகண்டு

அவர் மனம் வருந்தினர். மூத்த மகனுக்குப் புத்திரன் இல்லையே என்ற மனக்குறையோடு சேந்தமங்கலம் சென்று அங்கு தவயோகத்தில் இருந்த சுயம்பிரகாசப் பிரம்மேந்திர சுவாமிகளைக் கண்டு வணங்கி, "சுவாமிகளே என் மகன் நாற்பது வயது ஆகியும் இன்னும் மக்கட்பேறு இல்லாதவனாக இருக்கிறான். சந்ததி இல்லை என்றால் நரகம் வருமே என்று அஞ்சுகின்றேன்" என்று தெரிவித்தார். அம்மகான் "இராமசாமி உன் கவலை பொருத்தமற்றது. நீ இரண்டு மக்களைப் பெற்றிருக்கிறாய். ஒரு பெண்ணும் இருக்கிறாள். இரண்டாவது குமாரனுக்கும் குமாரிக்கும் சந்ததி சமிருத்தியாய் இருக்கும். உங்கள் வமிசம் அவர்கள் வழியே வளரும். மூத்தவன் மனம் வேறு வழியே போகிறது. அவனுக்குப் புத்திர பந்தம் இல்லாதிருப்பது ஈசுவர சங்கல்பம் என்றே தோன்றுகிறது. உனது வமிசம் விருத்தியாவது உண்மை. உனக்கு சிவகதியைத் தேடித் தரும் பெருமை உன் முதல் மகனுக்கே அமைந்திருக்கிறது. உங்கள் குலத்தில் இன்றளவும் எத்தனையோ மகான்களும் யதிகளும் இருந்திருக்கிறார்கள். இரண்டு தலைமுறைக்கு ஒருவர் சந்யாசம் ஏற்பது உண்டு என்பது உனக்கும் தெரியுமே. நீ சிறிதும் மனம் தளரவேண்டாம். எல்லாம் நன்மைக்கே" என்று கூறி விடைதந்தார்.

கோட்டிலாம்பாக்கத்தில் வந்து சேர்ந்த இராமசுவாமி தீக்ஷிதர் தாம் அறிந்து வந்த செய்தியை மனத்துள் அடக்கிக் கொண்டு தம் இஷ்ட தெய்வத் தியானத்தோடு இரண்டு ஆண்டு இருந்தார். சிவகதி சேரும் காலம் நெருங்கியிருப்பதை உணர்ந்த அவர் மூத்த மகனை அருகில் அழைத்து "குழந்தாய், இன்றோ நாளையோ நான் சிவபதம் சேர்வது உறுதி. உன்னை வளர்த்த சிற்றன்னை உன் அன்புக்கு உரிமை பூண்டவள். உன் மனைவி இன்றளவும் குடும்பத்தின் பொறுப்பு வகிப்பதில் மாமிக்குத்தக்க மருமகளாக இருந்திருக்கிறாள். உன் மனம் உலக வாழ்வில் ஈடுபடவில்லை என்பதை அறிவேன். இந்த வம்சத்தில் யதிவரர் பலர் முன்னும் பின்னும் இருந்தார். உனக்கும் அந்த யோகம்

இருக்கும் என்று அறிந்தேன். நீ சித்த வைராக்கியத்தால் இந்தக் குடும்ப பாரத்தை உதறிப்போகவே துணிந்தாலும் உன் தாய்க்கும் மனைவிக்கும் தம்பி தங்கைகளுக்கும் உரிய கடமைகளை இயற்றாது போகமாட்டாய் என்று நம்புகிறேன் இதுவே என் அந்திய கால வாசகம் என்பதை மறவாதே" என்று கண்களை மூடினார். குமாரர் அருகில் இருந்து இராம நாம ஜபம் செய்தார் இராமசாமி தீக்ஷிதர் இராம நாமம் உச்சரித்து உடம்பைப் பிரிந்து உயர்நிலை சென்றார்.

அவர்க்குரிய உத்திரகிரியைகளைப் பெரியோர் சென்ற நெறியில் நடத்திய குமாரர் தம்பிக்கும் தங்கைக்கும் தக்க இடங்களில் கலியாணம் நடத்தி வைத்துத் தமது சிற்றன்னையும் மனைவியும் சில நாட்களில் சிவபதம புகுந்ததால் அவர்களுக்கும் கடன் கழித்துவிட்டு உலகப்பற்று ஒழியும் சந்தர்ப்பம் அதுவே எனத் துணிந்து கோவண உடையுடன் உடலை மறைக்கும் ஒற்றைத் துணியோடு புறப்பட்டார்.

சேந்தமங்கலம் சுவாமிகளிடம் எப்பொழுதுமே பக்தி பூண்டிருந்ததால் முதலில் அவரைத் தரிசித்து சந்நியாச ஆசிரமம் தரும்படி வேண்டினார். அப்பொழுது அவர் உடல்நிலை நன்றாய் இல்லாதிருந்தது படுத்த படுக்கையில் இருந்தார். ஆகலால் அவர் அந்நிலையிலே சிஷ்ய ஸ்வீகாரம் செய்வது தகுதியில்லை என்று கூறி வடநாட்டில் குருவரைத் தேடுமாறு ஆணையிட்டார். கால் நடையாகவே இவர் அங்கிருந்து நடந்து திருச்சூருக்கு அருகில் உள்ள காலடிக்கு வந்தார். அங்கு அப்பொழுது அபூர்வமாகச் சிருங்ககிரி மடாதிபதி ஸ்ரீ சந்திரசேகரபாரதி ஸ்வாமிகள் எழுந்தருளியிருந்தார். அம்மகானிடம் இவர் தமது மனநிலையைத் தெரிவித்து மந்திர உபதேசம் வேண்டினார். இவரது பக்குவ நிலையை உணர்ந்த அப்பெரியோர் இவர்க்கு ஸ்ரீ தத்தாத்திரேய துவாதசாக்ஷரி மகாமந்திரத்தை உபதேசித்தருளினார்.

அதன்பிறகு சிருங்ககிரி மடாலயத்திலும் அம்மகாத்மாவைத் தரிசித்து அனுக்கிரகம் பெற்று வடநாடு

நோக்கி நடந்தார். வழியில் எவரையும் எவ்வகை உதவியும் வேண்டாமலே அங்கங்கு கிடைத்த உணவை உட்கொண்டு சில நாட்களில் காய்கனிகளையும் உண்டு நாகபுரிக்கு வந்து சேர்ந்தார். அங்கு புகை வண்டி நிலயத்துக்கு வந்து மூன்று நாள் பட்டினியோடு நாற்புறமும் பார்த்தார். தெய்வச்செயலால் அங்கு வந்த ஒரு செல்வர் இவர்க்கு முதலில் உணவு வருவித்துக் கொடுத்து டில்லிக்குப் போக வேண்டிய உதவியும் புரிந்தார். இவர் வண்டியில் ஏறும் போது அவரைத் தேடுகையில் எங்கும் காண இயலாமலே உபகாரிகள் குணம் இது போலும் என்று உணர்ந்து யாத்திரை செய்தார்.

டில்லி நகரில் சில நாள் இருந்து பிறகு ஹரித்துவாரம் ரிஷிகேசம் முதலிய புண்ணிய தலங்களுக்குச் சென்று அயோத்திக்கு வந்து பிரயாகையைக் கண்டு கங்கா ஸ்நானம் எங்கும் செய்து காசிக்கு வந்து சேர்ந்தார். காசியிலே குருதேவர் அமையவேண்டும் என்ற தாகத்தோடு விசுவேசனையும் விசாலாக்ஷியையும் அன்னபூரணியையும் துண்டி விநாயகர் காலபைரவர் மாதவர் முதலிய மூர்த்திகளையும் தரிசித்து கங்கைக் கரையில் நடந்து கொண்டிருந்தார்.

ஹனுமந்த கட்டத்தில் ஸ்நானம் செய்யும்போது ஒரு நாள் இராமநாமம் ஆயிரக்கணக்கில் எழுதப்பட்ட ஓடம் ஒன்று கங்கையில் நிற்கக்கண்டார். அந்த ஓடத்தில் நடு நாயகமாக ஒரு விருத்த சந்யாசி விளங்கும் காட்சியைக் கண்டார். அப்பொழுது அவர்க்கு நூற்றிருபது வயதுக்கு மேல் ஆயிருந்தது என்று அறிந்துகொண்டார். அவர் அவதூதர் ஆக இருப்பதையும் அவரைச் சுற்றி அநேகர் வலம் வருவதையும் கண்டு தாமும் அவ்வோடத்துக்குச் சென்று அம்மகானை வலம் வந்து வணங்கினார். அருகில் இருந்தவர் கூற அவர் பெயர் ஹரிஹரானந்த அவதூதி என்று அறிந்து கொண்டார். பலமுறை பிரதக்ஷிணம் செய்து முன்னிலையில் வந்து நமஸ்கரித்துக் கைகூப்பி நின்றார் ஹரிஹரானந்த அவதூதி சாதாரணமாகக் கண் திறந்து

எவரையும் பார்ப்பதும் பேசுவதும் இல்லை. முன்னே நின்ற இவரை அவர் ஒருமுறை கண்திறந்து பார்த்தார். அந்தக் கடாக்ஷவீக்ஷணமே மஹாநுக்கிரகம் என்று கருதிய இவர் இங்ஙனமே பலநாள் வந்து அவரை வணங்கினார்.

நாற்பது நாட்களுக்கு மேலாக இங்ஙனம் வணங்கி நிற்கும் இவரை ஒருநாள் அம்மகாத்மா 'நாளைப் பிற்பகல் இங்கு வந்து உபதேசம் பெறுக' என்றார். இவர் 'ஸ்வாமி அடியேனுக்கு சந்யாச ஆசிரமம் அனுக்கிரகிக்கவேண்டும்' என்று வணங்கிவேண்டினார். 'அங்ஙனமே ஆகுக' என்று அவர் கூறினார். மறுநாட்காலையில் இவர் முண்டனம் செய்துகொண்டு ஹரிஹரானந்தர் இராமநாம ஓட்த்துக்கு வந்தார். பலர் வந்து போய்க் கொண்டிருந்ததால் அவர் பிற்பகல் மூன்று மணி வரை ஒன்றுமே பேசாதிருந்தார். அதற்குமேல் சற்றே ஏகாந்தம் அமைந்தது. அப்பொழுது இவர்க்கு மகாமந்திர உபதேசம் பண்ணி சந்யாசமும் அநுக்கிரகித்தார். அந்த ஆசிரம சுவீகாரத்துக்கு தண்டகமண்டலம் அவசியம் இல்லை. காவிவஸ்திரமும் வேண்டுவதில்லை. கோவணம் ஒன்றே போதும். அதனையும் ஒழித்து அவதூதியாக இருக்கவும் அதிகாரம் உண்டு. சடைமுடி வளர்ப்பது வழக்கம் உண்டு. ஹரிஹரானந்தர் சுவாமிகள் அவதூதராகவே நூற்றிருபத்தைந்து ஆண்டு நிறைந்த பிறகு காசியில் சித்தி அடைந்தார். அந்த மகாத்மாவிடம் ஆசிரம சுவீகாரம் செய்து கொண்ட இவர் காவி யுடை அணிந்து முடியும் தாடியும் வளர்க்கும் விரதத்தோடு இருக்கிறார். சேந்தமங்கல சுவாமிகளும் அவதூதராகவே இருந்தார். இன்றும் ஹரித்துவாரத்தில் இந்த சம்பிர தாயத்தை அனுசரிக்கும் சந்யாசிகள் பலர் இருக்கின்றனர்.

குருப் பிரசாதம் பெற்ற இவர் அவர் அனுக்கிரகத்தால் இராமானந்தர் என்ற பெயர் பூண்டார். இராமநாமத்தில் விசேஷ பக்திபூண்ட குலத்திலே பிறந்து இராம பக்தரான குருவையும் அடைந்ததால் இவர்க்கு இப்பெயர் அமைந்தது.

சிலநாள் கங்கைக் கரை வழி நடந்து மீண்டும் ஹரித்துவாரத்
துக்கு வந்து ரிஷிகேசம் போய் இமயமலையில் உள்ள
புண்ணிய சிகரங்களில் கேதார நாதம் பதரி நாதம்
நாதம் என்ற மூன்றையும் தெரிசித்து நேபாளத்தின்
ரால் ஆதரிக்கப் பெற்றுச் சிலகாலம் அந்நாட்டில் இரு
இக்காரணத்தால் இன்று இவர்க்கு நேபாள சுவா
என்ற பெயரும் வழங்குகிறது. இமயமலையில் உ
பிரயாகை க்ஷேத்திரங்களை எல்லாம் தரிசித்துக் கங்காதீ
பல நாள் தவம்புரிந்து மீண்டும் ஒருமுறை புண்
க்ஷேத்திர யாத்திரை செய்துகொண்டே தென்னாடு
வந்தார். வடக்கேயிருந்து தென்னாட்டுக்குப் புறப்
போது இவர்க்கு நூறு சீடர்கள் இருந்தனர்.

மீண்டும் சேந்தமங்கலத்துக்கு வந்தார். அங்கு
குரு ஆலயமும் அதன்கீழ் ஸ்வயப்பிரகாச குகால
அமைத்து நித்தியநைமித்திகாதிகள் கிரமமாக நடை
அன்பர் முயன்று கொண்டிருந்ததால் அவ்வழியில் த
இயன்ற கைங்கர்யங்களைப் புரிந்தார். பிறகு
கோணத்தை அடுத்துள்ள ஜயகாளிபுரம் என்ற சே
புரத்தில் ஒரு மடாலயம் நிறுவ நினைத்துத் தத்தாத்
சக்கரமும் பாதுகையும் கார்த்தவீரிய அர்ஜுன சக்
சித்தம்பண்ணி அங்குள்ள ஆலயத்தில் சில ஆண்டு வ
வைத்திருந்து பிறகு அன்பர் பலர் உதவியால் ம
ஆலயமும் நிர்மித்துக் கும்பாபிஷேகமும் செய்து
திருப்பணி நன்கு சாசுவதமாக நிறைவேறத் தக்க முயற்சி
செய்து கொண்டிருக்கிறார்.

தத்தாத்திரேய சரித்திரத்தை ஆரிய மொழியில் இருந்து
தமிழில் மொழி பெயர்த்து வெளியிடவேண்டும் என்று
முயற்சி செய்து கொண்டிருக்கிறார். தத்த ஸ்தோத்திர
தரங்கிணீ தத்த லஹரி முதலிய புத்தகங்களை வெளியிட்டு
தத்தாத்திரேய சம்பிரதாயம் தமிழகத்தில் விளக்கம் பெற
வேண்டும் என்று முயன்று கொண்டிருக்கிறார். இன்று
முதுமைப் பருவத்தில் இவர் இளைஞரைப் போல மிகவும்

சுறுசுறுப்போடு தம் தரும கைங்கரியம் பூர்த்தியாகும் பொருட்டே ஆசேது ஹிமாசல பரியந்தம் நினைத்தவுடன் பயணம் செய்து வரவும் சித்தமாய் இருக்கிறார். சேங்காலி புரத்தில் நடைபெறும் குருகைங்கரியம் ஆசந்திரார்க்கம் எவவகைத்தடையும் இன்றி நடந்து வரத்தக்க முயற்சியும் செய்து கொண்டிருக்கிறார். தத்த குரு திருவருளும் சந்திர சேகரபாரதி திருவருளும் ஸ்வயம்பிரகாசப் பிரம்மேந்திரர் அனுக்கிரகமும் ஸ்ரீ ஹரிஹரானந்த அவதூதிகள் அனுக்கிரகமும் பெற்றிருக்கும் இத்துறவியார் நினைத்தவெல்லாம் நிறைவேறி நாட்டில் ஆஸ்திக்கியம் வளர வேண்டும் என்பதே நன்மக்கள் கோரிக்கையாம்.

---

Co-operative Press, Pudukkottai—J. No. 747—250—17—8—56.